—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

OFFICE OF THE REGISTRAR ... 12 APR 19.. MADRAS

வக்கீல்

இந்த இதழில்

போக்கிய ரத்து சட்டம்

படிக்கல் திராசு சட்டம்

கண்ட்ரோல்— ரேஷன்

லைசென்சு — விலை

...பந்தப்பட்ட விஷயங்கள்

...துலா திருத்தம்

...க்கெட் ஒழிப்பு மசோதா

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் உடனுக்குடன் விமர்சனங்களுடன் விளக்கும்

தமிழ் மாதப் பத்திரிகை

ஏப்ரல் 1949

1—1

... ரூ. 3
... 4

தபால்பெட்டி நெ. 26
கும்பகோணம் S. I. Ry.

A. V.

லெக்ஷ்மிநாராயண செட்டியார்,

114, பெரியதெரு, :: கும்பகோணம்.

எங்களிடம் பித்தளை பாத்திரங்கள், வெஸ்டெண்டு, பேவர்லூபா கடிகாரங்கள், கிராமபோன், ரிக்கார்டுகள், ஸண்டே வாஷிங் சோப்புகள் முதலியவைகள் விலை சரசமாக கிடைக்கும்.

PHONE No. 79

செல்வா எலெக்

ஸ்டோர்ஸ்,

பெரியகடைத்தெரு, கும்பகோண

எல்லாவிதமான எலெக்ட்ரிக் சாமான்களும் சகாயமான விலைக்குக் கிடைக்கும். ஒலிபெருக்கிச் சாதனங்களும் டெம்பரரி லைட்டுகளும், சகாயமாய் அமைத்துக் கொடுக்கப் படும். "ஓரியண்ட்" மின்சார விசிறிகளும் கிடைக்கும்.

REGISTERED TRADEMARK

ஜெயலெக்ஷ்மி & Co.,

கும்பகோணம்.

உலகப் பிரக்யாதிப் பெற்ற எங்கள்

அரைக்கீரை விதைத்தைலம், சந்தனாதித் தைலம், வாஸனைக் கலவைச் சந்தனம், பலரக ஊதுபத்தி தினுசுகள், வாஸனைப் பாக்குத் தூள், வாஸனை பில்லைகள், பஞ்சவர்ண கொப்பரைச் சீவல், தெசாங்கம், சந்தனப்பவுடர், ஸ்நானப் பொடி, வாஸனைச் சுண்ணாம்பு, கேஸர் பவுடர், ரோஜா குல்கந்து, வஸ்திர வாஸனை பொட்டலம், பல காய்கறி ஊர்காய் இவைகள் கிடைக்கும்.

For all Leather Goods

of Quality and

durability

at competitive prices.

THE DURABLE CROME FACTOR

Manufacturers of

High class Leather Goo

175 & 8, BROADWAY

MADRAS—1.

எல்லோரும்

விரும்பி

உபயோகிப்பது

○

ராம பாணம்

பற்பொடியே!

பல்லுக்கு உறுதிதரும் பொருள் கலந்தது இது ஒன்றே. எங்கும் ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்போர்:—

ஆர். கல்யாணராமன் & கோ.,
மடத்துத்தெரு,
கும்பகோணம்.

கல்யாண

பட்டு நூல்

ஜவுளிகளுக்கு

ராதா ஸில்க் எம்போரியம்,

119, பெரியதெரு :: கும்பகோணம்.

போன் நெ. 83

OFFICE OF THE REGISTRAR
12 APR 1949
MADRAS

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 ஏப்ரல் '49 இதழ் 1

பொருள் அடக்கம்

எமது பத்திரிகை 3

குறிப்புகள் 4

சென்னை விவசாயி கடன் நிவாரண திருத்தச் சட்டம். போக்கிய ரத்து 5

எடை அளவை ஒழுங்குச் சட்டம் 11

கண்ரோல்-லைசென்சு-ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள் 17

கடைசியில் வந்த அறிக்கைகள் 23

கள்ளமார்க்கெட் மசோதா 24

ஹிந்து(லா) சட்ட தொகுப்பு மசோதா 24

குடந்தையில் புதிய

மில் ஜவுளிக்கடை

ரோஸ் காட்டேஜ் :: பெஸண்ட் ரோடு

கும்பகோணம்.

எல்லா பொது மக்களுக்கும் மில் ஜவுளிகள் சௌகர்யமாக கிடைக்கவேண்டுமென்கிற கொள்கையில் எங்கள் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டபடியால் ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளதில் தங்கள் தேவைக்கு குறைந்த கண்ட்ரோல் விலையில் பெறலாம்.

கண்ணைக் கவரும் உயர்தர ரகங்கள்

N. மணி

வின்ஸென்ட் சோடா கம்பெனிக்கு எதிரில்

187684

ருசிகரமான சாப்பாடு சிற்றுண்டி
வகைகளுக்கும்
தகுந்த உபசரிப்பிற்கும்

ஸ்ரீ வெங்கடா

லாட்ஜ்

மடத்துத்தெரு, கும்பகோணம்.

நீங்கள் அடுத்த தடவை கும்பகோணம் வரும்பொழுது வெங்கட்டா லாட்ஜுக்கு விஜயம்செய்யத் தவறாதீர்கள்.

V. M. Subramania Iyer,
Proprietor.

Tel. "ROYAL"

உயர்ந்த பிளேசர் பட்டு உத்திரவாதமுள்ள ஜரிகை, பலரக கலர்கள்-உடை நயம் நாகரீக பல பார்டர் தினுசுகள் 6, 7, 8, 9 கெஜங்களில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ஒரே விலை விற்பனை!

K. T. A. K. L.

பாலகிருஷ்ணையர்

பட்டு ஜவுளி வியாபாரம்
8, சௌராஷ்டிர பெரியதெரு,
கும்பகோணம்.

லிங்கம் & கோ.,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

எங்களிடம் பலவிதமான

லெதர் பெல்ட் வகை ,, ஷூஸ் (களும் ,, சாண்டல்ஸ் ,, ஹேண்ட்பேக் வகைகளும் ,, மற்றும் இதர வேலைகளும்	தயாராவதோடு ஆர்டர்பேரிலும் குறிப்பிட்ட டயத்தில் திருப்திகரமாய் செய்துகொடுக்கப்படும்.

உரிமையாளர்:—

C. ராஜகோபாலன்.

"வக்கீல்"

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 ஏப்ரல் 1949 இதழ் 1

எமது பத்திரிகை

சுதந்திர இந்தியாவின் அமைப்பை நமது அரசியல் நிர்ணய சபை உருவாக்கிக் கொண்டு வருகிறது. உலகில் உள்ள மற்றச் சுதந்திர நாடுகள் போலவே நம் நாட்டிலும் ஜனநாயகம் வேரூன்றி நமது நாடு சமீபத்தில் ஒரு வல்லரசாகும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. பல்வேறு துறைகளிலும் புரட்சிகரமான சீர்திருத்தங்களைப் பார்க்கிறோம். மற்ற நாடுகள்போலப் பலாத்காரத்தினால் அல்லாமல் அமைதியுடனும் ஒழுங்குடனும் நம் சமூகத்தையே திருத்தியமைக்கும் உயரிய நோக்கத்துடன் தியாகமூர்த்திகள் அடங்கிய நமது மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் சட்டங்கள் இயற்றி வருகின்றனர். சட்டங்களை ஒட்டி விதிகளும் சர்க்கார் அறிக்கைகளும் விளம்பரங்களும் நாள்தோறும் வந்துகொண்டிருக்கின்றன. இச் சட்டங்களைப் பொது மக்கள் மேலெழுந்தவாறாவது தெரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம்.

இப்போது நமது சட்டங்கள் ஆங்கிலத்தில்தான் இயற்றப்பட்டு வருகின்றன. சர்க்கார் கெஜட்டில்வரும் தமிழ்மொழிபெயர்ப்பு எளிதில் விளங்குவனவல்ல. மொழிபெயர்ப்பில் யாதொரு கெடுதலும் இல்லை. பொதுவாய் சட்டங்களின் மொழி நடை விசித்திரமானது; நுட்பங்கள் அடங்கியது; வெவ்வேறு பொருள் செய்து கொள்ளக்கூடிய இயல்புடையது; சட்ட அறிஞர்களையும் திணற அடிப்பது; நீதிபதிகளுக்குள்ளும் அபிப்பிராயபேதம் உண்டாக்கக்கூடியது. சட்டம் எந்த மொழியில் இருந்தாலும் இப்படிப்பட்டதுதான். அதுவும் தாய்மொழியல்லாத ஆங்கிலத்தில் இருப்பது மற்றொரு இடைஞ்சல். ஆகையால் ஆங்கிலம் தெரியாத தமிழ் மக்களின் உதவிக்கே இப்பத்திரிகையை தொடங்கியிருக்கிறோம்.

அவ்வப்போது வெளிவரும் இந்திய யூனியன் சட்டங்களையும் சென்னை மாகாணச் சட்டங்களையும் எளிதில் விளங்கும் தமிழில் வெளியிடுவதுடன், வியாபாரிகளும், விவசாயிகளும், தொழிலாளிகளும், சிப்பந்திகளும் மற்றும் பல்வேறு வகுப்பினரும் தெரிந்துகொள்ளவேண்டிய விதிகள், பங்கீடு, கட்டுப்பாடு, லைசென்சு, விலை நிர்ணயம் இவற்றைப்பற்றிய சர்க்கார் அறிக்கைகளையும் விதிகளையும் ஒவ்வொரு மாதத்திலும் பொருள்வாரியாய்க் கோத்துக் கொடுப்போம். தவிர இனி வரப்போகும் சட்டங்களைப்பற்றியும் சட்டசபை நடவடிக்கைகளைப்பற்றியும் அவ்வப்போது தெரிவிப்பதுடன் நேயர்களுடைய அபிப்பிராயங்களையும் வெளியிடுவோம். பெரும்பான்மையோருக்குப் பயன்படக்கூடிய முறையில் பணியாற்றுவதே எங்கள் நோக்கம்.

வணக்கம்

குறிப்புகள்

பொது ஜனங்களின் நன்றி

வெள்ளையர் நம்மை ஆண்டு வந்த போது, முக்கியமாய் யுத்த காலத்தில் "பொது ஜனங்கள்" என்று அழைக்கப்படும் வாயில்லாப்பூச்சிக்கு மரியாதை காண்பித்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இல்லை என்றே சொல்லாம். காங்கிரஸ் அரசாட்சி புரிய ஆரம்பித்ததும் இந்த நிலைமை கொஞ்சம் மாறியதென்றாலும் அப் "பொது ஜனத்திற்கு" வேறு ஒரு வர்க்கத்தினருடைய தயவும் வேண்டித்தான் இருந்தது. அதாவது காங்கிரசின் பெயரால் ஏற்பட்ட சக்தியை திடீரென்று பயன் படுத்திக் கொண்டு யாதொரு அபாயமுமில்லாத நிலைமையில் காங்கிரஸ் ஸ்தாபனங்களைக் கைப்பற்றியும் தங்கள் செல்வாக்கை பல வகையில் பயன் படுத்தியும் உபயோகப் படுத்தியும் வந்த ஒரு சாராரைக் கவனித்து "பொது ஜனங்கள்" மிரளும் சமயத்தில் இப் "பொதுஜன"த்திற்குக் கொஞ்சம் ஆறுதலளிக்கும் இரண்டு அறிக்கைகளை கீழே கொடுத்திருக்கிறோம். இந்த இரண்டு அறிக்கைகளுக்கும் "பொது ஜனங்கள்" நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறார்கள்.

சென்னை சர்க்கார் அறிக்கை

பொது ஜன சர்க்கார் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டனர். ஆயினும் சர்க்கார் ஊழியர்கள், மக்களிடையே நடந்து கொள்ளும் முறை மாறவேயில்லை. அது முன்னிருந்தது போலவே இருந்து வருகிறதென்னும் புகார் பொது மக்களிடமிருந்து சர்க்காருக்கு வந்து கொண்டேயிருக்கிறது. ஒரு சிலர் நீங்கலாக, சர்க்கார் ஊழியர்கள் தங்களுடைய நடத்தையும், தாங்கள் மக்களுடன் பொதுவாக நடந்து கொள்ளும் முறையும் ஜனங்களின் நலத்திற்கும் நாட்டின் சேவைக்கும் பயன் படும்படி மாற்றிக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணங் கொண்டவர்களாயில்லை என்னும் புகாரும் இருந்து வருகிறது. சர்க்கார் ஊழியர், தங்கள் உதவியை நாடி வருகிற மக்களிடம் மரியாதைக் குறைவாகவும், அலட்சியமாகவும் நடந்து கொள்வது தவறு. அதிகார வர்க்கத்தின் ஆட்சி ஒழிந்ததென்றும் அது திரும்பி வராதென்றும், இனிமேல் மக்களை ஆட்சியாளரிடமிருந்து பிரித்து வைப்பது ஒன்றுமில்லை என்றும் மக்களிடம் உணர்ச்சி தோன்றும் வண்ணம் சர்க்கார் ஊழியர்கள் நடந்துகொள்ள வேண்டும். சர்க்கார் ஊழியர்கள் மக்களிடையே தொடர்பு கொள்ளும்போதும், உத்தியோக சம்பந்தமான செய்திப் போக்குவரத்துக்கள் நடத்தும் போதும் இப்புத்துணர்ச்சியைத் தோன்றுவிக்க வேண்டுமென்று மேற்படி ஊழியர்களுக்கு சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

(சென்னைச் செய்தி)

காங்கிரஸ் தலைவரின் அறிக்கை

காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாராமய்யா அவர்கள் தலைவர் பதவியை ஏற்றதும் ஜெய்பூர் காங்கிரஸின் ஒரு முக்கிய தீர்மானத்தை நடை முறையில் வற்புறுத்த காங்கிரஸ்காரர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையின் சாரம்:—

எந்த காங்கிரஸ்காரரும், முக்கியமாய் தேர்ந்தெடுக்கப் பட்ட ஸ்தாபனங்களிலுள்ளவர்கள் (மற்றவர்களுக்கு) உத்தியோகத்துக்காக சிபார்சு செய்யக் கூடாது. ஏற்றுமதி அல்லது இறக்குமதி இவற்றிற்கு பெர்மிட்கள் பெறவும், கடைகள் நடத்த லைசென்சுகள் பெறவும் கூடாது. இவைகளை தமக்காகவோ சிநேகிதர்களுக்காகவோ செய்யக் கூடாது. சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்டுகளில் வழக்குகள் சம்பந்தமாக போலீஸ், நீதிபதிகள், நிர்வாகஸ்தர்கள் போன்ற அதிகாரிகளிடம் சிபார்சுகளுக்கு போகக் கூடாது. போக்கு வரத்து கமிட்டிகள், துணி லைசென்சிங் போர்டு போன்ற ஸ்தாபனங்களில் மெம்பர் என்ற ஹோதாவில் தங்கள் செல்வாக்கை தங்களுக்காவது சிநேகிதர்களுக்காவது பிரயோஜனப் படுத்திக் கொள்ளக் கூடாது. லஞ்சம், கள்ளமார்கெட் இவைகளைப் பற்றி எங்கும் புகார் இருப்பதால் காங்கிரஸ்காரர்கள் தங்கள் நடத்தையில் இது சம்பந்தமாய் எவ்வித சந்தேகங்களும் வரும்படி கூட நடந்து கொள்ளக் கூடாது.

புதிய சட்டங்கள்

இப்பகுதியில் சமீபத்தில் அமுலுக்கு வந்த இந்திய யூனியனின் சட்டங்கள் சென்னைச் சட்டங்கள் இவைகளின் முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன

(1) சென்னை விவசாயி கடன் நிவாரண திருத்தச் சட்டம்

பழைய சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள்—இன்னும் பலர் "விவசாயிகள்" ஆவார்—போக்கிய ரத்து.

இத்திருத்தச் சட்டம் 1948-ஆம் வருஷத்திய 23-வது ஆக்ட். 12—1—1949 மே. த. கவர்னர் ஜெனரல் அவர்களின் அங்கீகாரம். 25—1—1949 சென்னை கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இதன் முக்கிய அம்சங்கள்: (1) ஏற்கனவே உள்ள 1938-ஆம் வருஷத்திய 4-ஆவது ஆக்ட்படி சிலர் விவசாயிகளாக இருந்தாலும் குறிப்பிட்ட வருஷங்களில் ஒரு தொகைக்குமேல் தொழில் வரி அல்லது வீட்டுவரி செலுத்தி இருந்தால் அவர்கள் பரிகாரம் அடைய லாயக்கில்லாதவராக இருந்தார்கள். இப்போது அந்த நிபந்தனைகள் தளர்த்தப் பட்டிருப்பதால் இன்னும் பலர் இப்போது விவசாயிகள் சட்டப்படி பரிகாரம் அடைவார்கள்.

(2) போக்கியம் அல்லது சொத்து சுவாதீனம் கொடுத்த ஒத்தி அல்லது அடமானங்களுக்கு பழைய சட்டம் உபயோகிக்கப்படவில்லை. இத்திருத்தச் சட்டப்படி சில போக்கியங்கள் ரத்தாகிவிடுகின்றன. சில போக்கியங்களுக்கு அசல்தொகை குறைந்துவிடுகிறது. ஆனால் இதற்குப் பல நிபந்தனைகள் இருக்கின்றன. இன்னும் சில சில்லறை மாறுதல்களும் இருக்கின்றன.

(3) விவசாயிகள் அல்லாத சிலரும் திருத்தச் சட்டப்படி நன்மை அடைகிறார்கள்.

இத்திருத்தச் சட்டம் யாருக்கு உபயோகப்படும்? இத்திருத்தச்சட்டத்திற்கு முன் ஒரு விவசாயி கடன்பட்டிருந்தாலும் (1) இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு தொடரப்பட்ட வியாஜ்யங்களிலும் நடவடிக்கைகளிலும் (2) இதற்கு முன் தொடரப் பட்டிருந்தாலும் டிக்ரி ஆகாமலோ, பைனல் டிக்ரி ஆகாமலோ இருக்கும் வியாஜ்யங்களிலும் (3) இச்சட்டத்திற்கு முன் டிக்ரி ஏற்பட்டிருந்த போதிலும் நிறைவேற்றப்படாமலோ நிறைவேற்றப்பட்டு முழுத்தொகையும் வசூலாகாமல் இருக்கும் நடவடிக்கைகளிலும் இத்திருத்தச் சட்டப்படி கடன் தொகைகள் குறைக்கப்படும். ஆனால் கடன் கொடுத்தவர் இத்திருத்தச் சட்டம் செலாவணியாகத் தொடங்குவதற்கு முன் வசூலித்திருக்கும் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. [16]

இத்திருத்தச் சட்டப்படி பரிகாரம் அடைய வேண்டிய விவசாயியின் சொத்து (டிக்ரி நிறைவேற்றப்பட்டு) கோர்ட் ஏலத்தில் 30-9-1947-லோ அதற்குப் பிறகோ ஏலம் போடப்பட்டிருந்து ஏலம் உறுதி (கன்பர்ம்) ஆகாமல் இருந்தாலும், உறுதியாகி இத்திருத்தச் சட்டம் வந்த தேதியில் 90 நாள் ஆகாமலிருந்தாலும் கடனாளி மனுப்போட்டுக்கொண்டு ஏலத்தை ரத்து செய்துகொள்ளலாம். அப்படி ரத்துசெய்ய இத்திருத்தச் சட்டம் வந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் மனுப் போடவேண்டும். (இந்தத்திருத்தச்சட்டம் செலாவணியாகத் தொடங்கியது:சென்னை கெஜட்டில் முதல் முதல் பிரசுரம் செய்யப்பட்ட தேதி 25-1-1949). ஏலம் உறுதியான 90 நாளி

[ ] இந்தப் பிராக்கட்டுக்குள் இருக்கும் எண்கள் சட்டத்தின் செக்ஷனைக் குறிப்பவை.

னும் போடலாம் என்று இருப்பதால் இச் சட்டம் வந்த தேதிக்குப் பிறகு ஏலம் உறுதியானாலும் அதிலிருந்து 90 நாட்களில்கூட மனுப்போடலாமென்று சொல்ல இடமுண்டு. [23 A]

பழைய சட்டப்படி அச்சட்டத்திற்கு முன் (அதாவது 22-3-1938க்கு முன்) ஏற்பட்ட கோர்ட் டிக்ரியை மட்டில்தான் குறைக்க (ஸ்கேல் டவுன் செய்ய) மனுப் போடலாம். சட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட டிக்ரிகளைக் குறைக்க முடியாது. ஆனால் இப்போது அச்சட்டத்திற்கு முன் கடன் ஏற்பட்டிருந்தால் டிக்ரி பிந்தி ஏற்பட்டால் கூட, அதைக்குறைக்க மனுப் போடலாம். ஏனென்றால் பழைய சட்டப்படி பரிகாரம் அடைய லாயக்கில்லாதவர்கள் இப்போது திருத்தச் சட்டப்படி பரிகாரம் அடைகிறார்கள். [19 (2)]

இனி திருத்தச் சட்டப்படி உள்ள மாறுதல்களைக் கவனிப்போம்.

இன்னும் பலர் "விவசாயிகள்" ஆகிறார்கள்: (1) ஏற்கனவே உள்ள சட்டப்படி 31—3—38-க்கு முன் உள்ள இரண்டு வருஷங்களில் ஏதாவது ஒரு வருஷத்தில் மாத்திரம் வருமான வரி (இன்கம் டாக்ஸ்) விதிக்கப்பட்டவர் நிலம் குத்தகை முதலிய ஏதாவது இருந்தாலும், "விவசாயி" ஆகமாட்டார். இத்திருத்தச் சட்டப்படி 31—3—38-க்கு முன் உள்ள இரண்டு வருஷங்களிலும் வருமான வரி போடப்பட்டவர்தான் "விவசாயி" இல்லை. அதாவது இதில் ஒரு வருஷத்தில் அவருக்கு வருமான வரி போட்டிருந்தாலும் பாதகமில்லை; அவர் "விவசாயி" தான். [3 ii A]

(2) அதே விதமாய் பழைய சட்டத்தில் 1—10—37-க்கு முன் உள்ள இரண்டு வருஷங்களில் எப்பொழுதாவது முனிசிபல் அல்லது ஸ்தல ஸ்தாபன சட்டப்படி ஒருவருக்கு அரை வருஷத்திற்கு ரூ 300 வருமானத்திற்குள்ள வருமான வரி போடப்பட்டிருந்தாலும், ரூ 600 வாடகை மதிப்பின் பேரில் வீட்டு வரி போடப்பட்டிருந்தாலும் அவர் விவசாயி அல்ல. இப்போது இது இரண்டு விதமாகத் திருத்தப்பட்டிருக்கிறது. திருத்தச்சட்டப்படி ஒரு அரை வருஷத்திற்கு ரூ 600 வருமானத்திற்குள்ள வருமான வரி போடப்பட்டவர் தான் விவசாயி அல்ல. மேலும் இந்த ரூ. 600-க்குள்ள வருமானவரியும் ரூ 600 வாடகை மதிப்புக்குள்ள வீட்டு வரியும் 1—10—37-க்கு முன் உள்ள நான்கு அரை வருஷங்களுக்கும் ஒருவருக்கு சேர்ந்தால் போல் போட்டிருந்தால் மட்டில் அவர் "விவசாயி" ஆகமாட்டார். அப்படி போடப்பட்டிராவிட்டால் அவர் "விவசாயி" என்றே கருதப்படுவார். இதன் அனுகூலத்தை மற்றப்படி விவசாயி என்ற யோக்யதை உள்ளவர்கள் பலர் அடைவார்கள்.

"வட்டி" என்றால் எது? பழைய சட்டத்தில் 'வட்டி' என்ற வார்த்தை பல இடத்தில் உபயோகப் படுத்தப் பட்டிருந்தாலும் அதன் பொருள் தெளிவாக விவரிக்கப்படவில்லை. இப்போது "வட்டி" என்றால் கடன் வாங்கிய அசல் தொகைக்கு மேல் எது கொடுக்க வேண்டியிருந்தாலும் அது ரொக்கமாக இருந்தாலும் தானியமாக இருந்தாலும் அது "வட்டி"யே ஆகும்.

ஸ்திரீகளுக்குச் சேர வேண்டிய கடன் சம்பந்தமாய் மாறுதல்: ஏற்கனவே உள்ள சட்டத்தில் ஒரு ஸ்திரீக்கு 1—10—1937-ல் ஒரு விவசாயி கடன் கொடுக்கவேண்டி இருந்தாலும் அவளுக்கு கொடுக்க வேண்டிய அசல் தொகை ரூ 3000-க்கு மேல் இல்லாமலும் அவளுக்கு வேறு யாதொரு ஐவேஜியும் இல்லாமலும் இருந்தால் அவளுக்குச் சேர வேண்டிய ஜாடா அசல் வட்டித்தொகையையும் விவசாயி கூட கொடுக்க வேண்டியது தான். சட்டத்தால் அவளுடைய அசல்

வட்டி பாதிக்கப்படமாட்டாது என்று இருந்தது. இப்போது ஏற்பட்டிருக்கும் திருத்தத்தில் அவளுக்கு 1—10—1937-ல் கொடுக்கப்பட வேண்டிய கடன் அசல் தொகையும் இதர சொத்துக்களின் மதிப்பும் சேர்ந்து ரூ. 6000 மதிப்புக்கு மேல் போகாமல் இருந்தால் அவளுக்குச் சேர வேண்டிய கடன் பாதிக்கப் படமாட்டாது என்று திருத்தப்பட்டிருக்கிறது. [4 h]

கடனாளி கொடுத்த தொகை அசலுக்கா அல்லது வட்டிக்கா வரவுவைத்துக்கொள்வது? பழைய சட்டத்தில் இது சம்பந்தமாய் ஒன்றும் தெளிவாய் இல்லை. இப்போது திருத்தச் சட்டத்தில் இவ்விஷயம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதாவது:—

(1) 1—10—1932க்கு முன் ஏற்பட்டுள்ள கடன் சம்பந்தமாய், கடனாளி கொடுக்கும் ஒவ்வொரு தொகையும் அசலுக்கே வரவுவைக்கவேண்டும்; ஆனால் கடனாளி தெளிவாக எழுத்து மூலம் தான் கொடுக்கும் தொகையை வட்டிக்கு வரவு வைத்துக்கொள்ளும்படி சொல்லி இருந்தால் அதை வட்டிக்கு வரவுவைத்துக்கொள்ளலாம். [8 விவரணம் 1]

(2) 1-10-32க்கு முன் வாங்கப்பட்ட கடன் அசல் தொகை ரொக்கமாக இருந்து அதைத் திருப்பி தானியம் அல்லது இனமாகக் கொடுப்பதாகக் கடனாளி ஒப்புக்கொண்டிருந்தாலும் அது செல்லாது. கடனாளி திருப்பி ரொக்கமாய்க் கொடுக்கலாம். அதிலும் அவரால் கொடுக்கப்பட்ட தானியங்களின் சரியான விலையைக் கழித்துக்கொண்டு பாக்கியை மட்டில் ரொக்கமாய்க் கொடுத்தால் போதும். [8 விவரணம்2]

(3) ஏற்கனவே உள்ள சட்டத்தில் 1—10—32க்கு முன் ஏற்பட்டுள்ள கடன்களைப் புதுப்பித்துக் கொடுத்திருந்தால் எப்படி ஆகும்? அதன் அசல் தொகை எது? எழுதிக்கொடுத்தவரோ எழுதி வாங்கியவரோ மாறுபட்டிருந்தால் அது புதுக் கடனா அல்லது பழைய கடனே புதுப்பிக்கப்பட்டதா என்று பல சந்தேகங்கள் இருந்தன. இத்திருத்தச் சட்டப்படி ஒரு கடனை புதிப்பித்தோ வேறு தஸ்தாவேஜியில் சேர்த்தோ இருந்தால், அது இச்சட்டத்திற்கு முன் இருந்தாலும் பின் இருந்தாலும் எழுதிக்கொடுப்பவர் பழைய கடனாளியாக இருந்தாலும் வேறு நபராக இருந்தாலும் எழுதிவாங்குபவர் பழைய கடன்காரராக இருந்தாலும் புது நபராக இருந்தாலும் ஆதியில் ஏற்பட்ட அசலும் பின்பு மேற்கொண்டு அசலாகக் கொடுக்கப்படும் தொகையும்தான் "அசல்" என்று பாவிக்கப்படும். அதற்குமேல் உள்ள எல்லாத் தொகைகளும் சட்டத்தில் நிவர்த்திக்கப் படவேண்டிய வட்டியே. [8 விவரணம் 3]

(4) அவ்விதமே 1-10-32க்குப் பிறகு ஏற்பட்ட கடன் சம்பந்தமாயும் புதுப்பிக்கப்பட்ட தஸ்தாவேஜிகள் அதே கடனாளியாலோ வேறு ஒருவராலோ எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தாலும் எழுதி வாங்கியவர் அதே கடன்காரராக இருந்தாலும் வேறு ஒருவராக இருந்தாலும் ஆதியில் ஏற்பட்ட தேதியிலேயே கடன் ஏற்பட்டதாகும். அந்தத் தேதி 1—10—32க்கு முன் இருந்தால் 8-வது செக்ஷன்படிக்கும் பின் இருந்தால் 9-வது செக்ஷன்படிக்கும் வட்டி குறைக்கப்படும். [9]

போக்கியங்கள் ரத்து: பழைய சட்டத்தில் 22—3—38க்கு முன் ஏற்பட்ட போக்கியங்களுக்கு (அதாவது வட்டி விகிதம் காணாமல் ஏற்பட்ட அடமான ஒத்தி அல்லது சுவாதீன அடமானங்களுக்கு) அச்சட்டம் உபயோகிக்கப்பட மாட்டாதென்று [10 (2)]-ல் காணப்பட்டிருந்தது.

இப்போது செக்ஷன் [9A] என்று புதிதாய் ஒரு செக்ஷன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் ஷரத்துக்கள் கேடுவுக்கு முன்பே சொத்தை மீட்கலாம். 30-9-47க்கு முன் ஒரு போக்கிய (ஒத்தி) பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டு போக்கியம் பெற்றவர் சொந்தமாகவோ குத்தகைக்காரர் மூலமோ கடன் வாங்கியவருக்கே குத்தகைக்கு விட்டோ போக்கிய சொத்தை அனுபவித்துக்கொண்டிருந்தால், அவருடைய போக்கிய தஸ்தாவேஜிப்படி சொத்தை மீட்டுக்கொள்ள இன்னும் எவ்வளவு கெடு இருந்தபோதிலும், அக்கெடு நிபந்தனை இல்லாமல் கடனாளி சொத்தை மீட்டுக்கொள்ளலாம். [9A 1]

உதாரணம்: 1—9—1945-ல் ஏற்பட்ட போக்கிய தஸ்தாவேஜியில் 10 வருஷம் கெடு போடப்பட்டிருக்கிறது. இச்சட்டத்திற்கு முன் 1—9—1955-க்குள் இந்த போக்கியத்தை விவசாயிகடனாளி மீட்க முடியாது. இத்திருத்தச் சட்டப்படி அதற்கு முன்னும் மீட்கலாம்.

போக்கிய சொத்தை மீட்க எவ்வளவு தொகை கட்டவேண்டும். 30 வருஷமாகி விட்டால் ஜாடாகடனும் ரத்து. இருந்தாலும் சில நிபந்தனைகள் உண்டு: போக்கியம் பெற்றவர் போக்கிய சொத்தை நேரிலோ கடனாளிக்கோ வேறு ஒருவருக்கோ குத்தகைக்கு விட்டோ 30 வருஷம் அல்லது அதற்கு மேலோ அனுபவித்துவிட்டால் அவருக்குச் சேரவேண்டிய ஜாடா அசல் தொகையும் ரத்தாகிவிடுகிறது. யாதொரு தொகையும் கொடுக்காமலே கடனாளி சொத்தை மீட்டுக் கொள்ளலாம். இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதி (25-1-1949) க்கு முன்பே இந்த 30 வருஷம் கடந்துவிட்டால் இச்சட்டத் தேதியில் கடன் ரத்தானதாகக் கருதப்படும். [9A 3]

30 வருஷங்களுக்குக் குறைவானால் வீதாசாரமாய் அசல் தொகை ரத்து: அப்படி போக்கியம் ஏற்பட்டு 30 வருஷம் ஆகாவிட்டாலும், அனுபவித்த வருஷங்களுக்கு வீதாசாரமாய் அசல் தொகை ரத்தாகும். ஜாடா அசல் தொகையும் 30 வருஷத்தில் ரத்தாவதால் வருஷம் 1-க்கு அசலில் 30-ல் 1 பங்கு ரத்தாகும். ரத்தான தொகை போகப் பாக்கித் தொகையைக் கட்டி கடனாளி மீட்டுக் கொள்ளலாம். [9A 2]

உதாரணம்: ஒரு விவசாயி 1939-ல் தன் நிலங்களை போக்கியம் வைத்து ரூ. 3000 கடன் வாங்கினர். கடன் கொடுத்தவர் நேரிலோ குத்தகைக்கு விட்டோ 10 வருஷம் அனுபவித்த பிறகு 30-ல் 10 பங்கு அதாவது 3-ல் 1 பங்கு அசல் கடன் ரத்தாகி விடுவதால் 1949-ல் கடனாளி ரூ. 2000 கட்டி சொத்தை மீட்டுக்கொள்ளலாம். (ஆனல் அப்படி தொகை கொடுத்தோ கொடுக்காமலோ சொத்தை மீட்டுக்கொள்ளுமுன் போக்கிய சொத்துக்களுக்கு ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால் அதன் செலவையும் கடனாளி கொடுத்துவிடவேண்டும். [9A 4]) போக்கியதார் சொத்தைத் திருப்பிக் கடனாளிக்கே குத்தகைக்கு விட்டிருந்த போதிலும் அல்லது வேறு யாருக்குக் குத்தகைக்கு கொடுத்திருந்த போதிலும் அவரே சொத்தை அனுபவித்தது போல்தான் ஆகும். [9A 5]

கடனாளிக்கே சொத்தை குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் (30 வருஷ அனுபோகத்தால் ஜாடா கடனும் ரத்தாகாமல் இருந்தால்) கடனாளி குத்தகைக்குப் பதிலாக இச்சட்டப்படி ஒரு விவசாயி கொடுக்க வேண்டிய வட்டியை மட்டில் கொடுத்தால் போதும். [9A 6a] கடனாளியே குத்தகைதாராக இருந்து 30 வருஷ அனுபோகத்தால் போக்கிய கடன் ஜாடாவும் ரத்தாகி விட்டால், அப்படி அசல் ரத்தாகும் தேதி

வரையில் உள்ள குத்தகைத் தொகையைப் போக்கியதார் வசூலிக்கப் பாத்தியமுண்டு. காலாவதியாகாமல் இருந்தால் வசூலிக் கலாம். [9A 6b]

சில இடங்களில் போக்கிய ரத்து கிடையாது: இப் புதுச்சட்டப்படி போக்கியம் பூராவுமோ ஒரு பாகமோ ரத்தாவது தென் கன்னடம் ஜில்லா, மலையாள ஜில்லாவில் சிரக்கல், கோட்டயம், குரும்பாநாடு, வய நாடு தாலூக்காவிலுள்ள சொத்துக்களுக் குக் கிடையாது. [9A 7]

மற்ற இடங்களிலும் சிலருக்கு இச்சட்டம் லாபமில்லை: (1) 30—9—37-க்குப் பிறகு 30-1-48-க்கு முன் போக்கிய சொத்தின் சுவான் பாத்தியம் பூராவுமோ ஒரு பாகமோ கடனாளியாலாவது கடனாளிமூலம்பாத்தியம் கொண்டாடுபவராலாவது பராதீனப்படுத் தப்பட்டிருந்தால் அப்படி பராதீனப்படுத் தப்பட்ட சொத்து சம்பந்தப்படுத்தப்பட்ட வரையில் போக்கியக் கடன் அசல் ரத்தா காது. [9A 7ii]

உதாரணம்: (1) ஒரு கடனாளி 1920-ல் தம் சொத்துக்களைப் போக்கியம்வைத்து ரூ. 5000 கடன் வாங்குகிறார். அவர் 1940ல் மேற்கண்ட போக்கியத்திற்குட்படுத்தி, தம் சுவான் பாத்தியத்தை வேறு ஒருவருக்குக் கிரயம் செய்கிறார். கிரயம் பெற்றவர் ஜாடா அசல் ரூ. 5000-யும் கொடுத்தால் போக்கிய சொத்தை மீட்டுக்கொள்ளலாம். இச்சட்டம் இச்சொத்தை வாங்கியவருக்கு லாபமளிக்கவில்லை.

உதாரணம்: ஒரு கடனாளி 1920-ல் தம் சொத்துக்களைப் போக்கியம்வைத்து ரூ. 5000 கடன் வாங்குகிறார். அவர் அச் சொத்தின் சுவான் பாத்தியத்தைப் போக்கி யத்திற்குட்படுத்தி 1935-ல் வேறு ஒருவ ருக்குக் கிரயம் செய்கிறார். இந்தக் கிரயம் 30—9—1937க்கு முன் ஏற்பட்டபடியால் 1950-ல் போக்கியத் தொகை ஜாடாவும் ரத்தாகிவிடும்.

உதாரணம்: 1920-ல் தம் சொத்துக்களை ஒருவர் போக்கியம்வைத்து ரூ. 5000 கடன் வாங்கினார்; அவர் 1940-ல் இறந்துபோய் விட்டார். சொத்து அவர்களுடைய வார்சு களிடம் இருக்கிறது. 1950-ல் ஜாடா அசலும் ரத்தாகிவிடும். ஆனால் இந்த வார்சானவர் 1945-ல் சொத்தை வேறு ஒருவருக்கு விற்றிருந்தால் வாங்கியவருக்கு லாபமில்லை. போக்கிய அசல் தொகை ரத்து ஆகாது.

(2) அதுபோலவே 30—9—1937க்குப் பின் 30—1—1948-க்கு முன் சரியான பிரதிப் பிரயோஜனத்தின்பேரில் வாஸ்தவ மாகப் போக்கிய பாத்தியம் பூராவுமோ ஒரு பாகமோ வேறு ஒருவருக்கு (மேடோவர் அல்லது டிரான்ஸ்வர்) மாற்றப்பட்டிருந் தால், அப்படி மாற்றப்பெற்றவர் மாற்றப் பட்டிருக்கும் சொத்துக்கு வீதாச்சாரப் படிக்கும் அவர் கொடுத்த பிரதி பிரயோ ஜனத் தொகைக்கு மேற்படாமலும் உள்ள போக்கிய அசல் தொகையை அடையப் பாத்தியமுள்ளவர். ஆனால் இவர் பூரா குத்தகைத் தொகையும் (கடனாளியிடம் குத்தகைக்கு விட்டிருந்தால்) வசூல் செய்ய லாம். [9A 7b]

உதாரணம்: 1920-ல் ரூ. 5000-க்கு ஏற் பட்ட ஒரு போக்கியத்தை ஒருவர் ரூபாய் 3500 கொடுத்து 1945-ல் டிரான்ஸ்பர் வாங் கிக்கொள்கிறார். இச்சட்டப்படி இவர் கொடுத்த ரூ. 3500-ம் இவருக்குக் கிடைக் கக்கூடியது. 30 வருஷம் ஆனாலும் இது கிடைக்கும். போக்கியத்தின் அசல் ஜாடா வும் ரத்தாகாது. இவர் ரூ. 5000 கொடுத்து டிரான்ஸ்பர் பெற்றிருந்தால் இவர் ஜாடா தொகையையும் அடையப் பாத்தியமுள்ள வர். போக்கிய அசல் கொஞ்சமும் ரத்தா காது. இவர் டிரான்ஸ்பர் பெற்றது 1935ல் இருந்தால் ஜாடா அசலும் ரத்தாகிவிடும்.

(3) போக்கியக் கடன் கொடுத்தவர்கள் பலராக இருந்து அல்லது போக்கிய பாத்தியம் பலரிடம் வந்து அவர்களுக்குள் 30—9—1937க்குப் பின் 30-1-1948க்கு முன் பாகம் ஏற்பட்டிருந்தால் அவர்களை இச்சட்டம் பாதிக்காது. அசல் ரத்தாகாது. [9A (7c)]

உதாரணம்: ஒருவர் ஒரு சொத்தின் போக்கியத்தின்பேரில் 1920-ல் ரூ. 5000 கடன்கொடுத்து 1930-ல் இறந்துபோகிறார். அவருக்கு இரண்டு புதல்வர்கள். தங்கள் சொத்தை 1940-ல் பாகம் செய்துகொள்கிறார்கள். இந்தப் போக்கிய பாத்தியம் யாருடைய பாகத்தில் வைக்கப்பட்டாலும் அல்லது இருவருக்குள் பிரிக்கப்பட்டிருந்தாலும் கடனாளி ஜாடா அசல் தொகையும் கொடுத்துத்தான் சொத்தை மீட்டுக் கொள்ளவேண்டும். ஆனால் 1935-ல் அவர்கள் பாகம் செய்துகொண்டிருந்தால் 1950ல் ஜாடா போக்கிய அசலும் ரத்தாகிவிடும்.

(4) கடனாளியின் பாத்தியம் அதாவது போக்கிய சொத்தின் சுவான் பாத்தியம் பலருக்குச் சொந்தமாக இருந்து அதில் ஒருவர் 30—9—1937-க்குப் பின் 30—1—1948-க்கு முன் ஜாடா போக்கிய தொகையையும் கொடுத்து போக்கிய சொத்தை மீட்டுக் கொண்டிருந்தால் அவர் மற்றவர்களிடம் சட்டப்படி வீதாசாரத் தொகை ஜாடாவையும் வசூல் செய்யும் பாத்தியம் இத்திருத்தச் சட்டத்தால் பாதிக்கப்படமாட்டாது. [7 A (8)]

புதிதாய்கடன் வாங்குபவருக்கு: ஏற்கனவே உள்ள சட்டப்படி அச்சட்டம் வந்த தேதியாகிய 22-3-1938க்குப்பின் ஒரு விவசாயி கடன் வாங்கினால் 100க்கு $5\frac{1}{2}$%தான் வட்டி. ஆனால் அவருக்கு கடன் வாங்குமுன் இரண்டு வருஷங்களில் எந்த வருஷத்திலாவது வருமான வரி போடப்பட்டிருந்தாலும், தொழில் வரி அல்லது வீட்டு வரி போடப்பட்டிருந்தாலும் அவர் "விவசாயி" ஆகமாட்டார். இப்போது ஏற்பட்டிருக்கும் திருத்தத்தில் கடன் வாங்கு முன் உள்ள இரண்டு வருஷங்களிலும் அவருக்கு மேற்கண்ட வரிகள் போட்டிருந்தாலொழிய அவர் "விவாசாயி" வட்டி குறைக்கப்படும். [13]

விவசாயி அல்லாதவருக்கும் வட்டி குறைவு: இத்திருத்தச் சட்டத்தில் 13 A என்று ஒரு புது செக்ஷன் சேர்க்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி விவசாயியாக இருந்தால் அவர் வாங்கிய கடன் 1-10-32-க்கு முன் இருந்தால் 1-10-37 வரை ஜாடா வட்டியும் ரத்தாகி அதற்குப் பிறகு $6\frac{1}{4}$% வட்டி. கடன் 1—10—32-க்குப் பிறகு ஏற்பட்டிருந்தால் $5\frac{1}{2}$% வட்டி. இது விவசாயிகளுக்கு மட்டிலே. இப்புது செக்ஷன்படி ஒருவருக்கு நிலம் குத்தகை ஏதாவது இருந்தும் தொழில் வரி அல்லது வீட்டு வரி கொடுக்கும் காரணத்தால் மட்டில் அவர் "விவசாயி" அல்ல என்று ஏற்பட்டால் இவருக்கும் $5\frac{1}{2}$% தான் வட்டி. [13 A]

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 187684 சென்னை-600 008

(2) எடை அளவை ஒழுங்கு சட்டம்

(படிக்கல், தராசு, படி முதலியவை சம்பந்தப்பட்டது)

சென்னை 1948 ஆம் வருஷத்திய 22-வது ஆக்ட். 11—1—1949-ல் மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு 25—1—1949-ல் சென்னை கெஜட்டில் பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது.

சட்டத்தின் நோக்கம் :

சென்னை மாகாணத்தில் இப்போது வழங்கும் எடை படிக்கல், படி, சேர் முதலியவை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர் உள்ளவையாகவும், நிறை உள்ளனவாகவும் இருக்கின்றன. உதாரணமாக, "தூக்கு" என்ற நிறை சில இடங்களில் 6¼ சேராகவும் சில இடங்களில் 7 சேராகவும் வேறு இடங்களில் 8 சேராகவும் பல இடங்களில் இந்த நிறை இன்னதென்று தெரியாமலும் இருக்கிறது. அதுபோலவே நெல் முதலிய தானியங்களை அளப்பதில் தஞ்சை ஜில்லாவில் வழங்கும் "கலம்" என்பதற்கும் திருச்சி ஜில்லா "கலம்" என்பதற்கும் மிக்க வித்தியாசம் உண்டு. நிலங்களின் விஸ்தீரணத்தைச் சொல்லும்போதும் தஸ்தாவேஜிகளில் எழுதும்போதும் சில இடங்களில் "ஏகர்" கணக்கிலும் சில இடங்களில் "வேலி" "மா" என்றும் சில இடங்களில் 'காணி' என்றும் வழங்கப்படுகிறது. இவ்வேறுபாடுகளை இச்சட்டம் ஒழுங்கு படுத்துகிறது. பொது உபயோகத்திலும் சில குறிப்பிட்ட வியாபாரங்களிலும் எந்த எந்த எடை, படிக்கல், கஜக்கோல், படி முதலிய அளவைகள் தான் உபயோகப் படுத்தப்பட வேண்டுமென்றும் அவைகளின் நிறை அல்லது அளவு எவ்வளவு என்றும் இச்சட்டம் நிர்ணயம் செய்கிறது. மேலும் தராசு, வேயிங்மெஷீன் போன்ற கருவிகளும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. வியாபாரிகள் இச்சட்டத்தில் அனுமதிக்கப் படாத எடை அளவுகளை வைத்திருப்பதும் உபயோகப்படுத்துவதும் குற்றம். அனுமதிக்காத எடை அளவுகளை அனுசரித்து ஏற்படும் ஒப்பந்தங்களும் தஸ்தாவேஜிகளும் செல்லத்தக்கவையல்ல; ரிஜிஸ்டர்கூட செய்யப்படமாட்டாது.

சட்டம் எப்பொழுது முதல் அமுலுக்கு வரும்? மாகாண சர்க்கார் சென்னை கெஜட்டில் விளம்பரம் செய்து இச் சட்டத்தைச் சென்னை மாகாணம் முழுவதிலுமோ சில பாகங்களிலோ குறிப்பிட்ட தேதிமுதல் அமுலுக்குக் கொண்டுவரலாம். [1]

(அது அவ்வப்போது நமது பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.)

அங்கீகாரமான எடைகளும் அளவைகளும்

சென்னை மாகாணத்தில் பல பல பெயர்கள் கொண்ட எடைகளும் பல நிறையுள்ள எடைகளும் வழங்கப்பட்டாலும் அவைகள் எல்லாவற்றையும் இச்சட்டம் அங்கீகரிக்கவில்லை. சில எடைகளையும் சில அளவைகளையுமே அங்கீகரிக்கிறது. ஏற்கனவே மத்திய சர்க்காரால் 1939 ஆம் வருஷத்திய 9 ஆவது ஆக்ட் என்று சில எடைகளை மட்டும் நிர்ணயிக்கும் ஒரு சட்டம் இருக்கிறது. அதில் கண்ட எடைகளை இச்சட்டம் அங்கீகரிப்பதுடன் இம்மாகாணத்துக்காகப் பிரத்தியேகமாய்ச் சில எடைகளையும் சில அளவைகளையும் மட்டிலும் இச்சட்டம் அங்கீகரித்து அவைகளை இதன் ஷெட்

யூலில் விவரித்திருக்கிறது. ஷெடியூல் இத்னடியில் அப்படியே கொடுக்கப்பட்டிருக் கிறது.

மத்திய சட்டப்படி ஸ்டாண்டர்ட் கிரெயின், தோலா, சேர், மணு, பவுண்டு, அவுன்சு, (அந்தர்) ஹண்ரட் வெயிட், டன் என்ற எடைகளும் அவை ஒவ்வொன்றும் இருக்கவேண்டிய நிறையும் சொல்லப்படுகிறது. இவையாவும் "ஸ்டாண்டர்ட்கிரெயின்" என்ற ஒரு எடையை ஆதாரமாய்க் கொண்டது. அந்த "ஸ்டாண்டர்ட் கிரெயின்" என்பதின் நிறை ஒன்று பம்பாய் மிண்ட் மாஸ்டர் என்ற உத்தியோகஸ்தரிடம் இருக்கிறது. இச்சட்டத்தின் எடைகளும் "ஸ்டாண்டர்ட் கிரெயின்" என்ற எடையையே ஆதாரமாகக் கொண்டது. விவரம் கீழே காணலாம்.

இச்சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மற்ற எடை அளவுகள்: பொது உபயோகத்துக்கு (1) பலம். (2) மதரூஸ் சேர். (3) வீசை. (4) மதரூஸ் மணங்கு. (5) கண்டி.

பொன் வெள்ளி வியாபாரத்தில்: ஸ்டாண்டர்ட் தோலா.

ரத்தினம், வைரம், முத்து வியாபாரத்தில்: காரட்.

மருந்து வியாபாரத்தில்: கிராம், அவுன்சு ஸ்க்ரூப்பில்.

நீட்டலளவைக்கு: அங்குலம், அடி, கஜம், லிங்க், செயின், பர்லாங்கு, மைல்.

பரப்பலளவு அல்லது விஸ்தீரணத்துக்கு: சதுர அங்குலம், சதுர அடி, சதுர கஜம், ஏகரா.

கன அளவில் பொது உபயோகத்துக்கு: கன அங்குலம், கன அடி, கன கஜம், மதராஸ் படி, டைப் சேர், திரவ அவுன்ஸ், பைண்ட், க்வார்ட், காலன், புஷல்.

மருந்து வியாபாரத்தில்: திரவ அவுன்ஸ் திரவ திராம், மினிம்.

இவைகளின் பெயர்கள் முக்கியமானவை:

இனி இச்சட்டத்தின் ஷெட்யூலில் கண்ட பெயர் கொண்ட எடைகளையும் அளவைகளையும்தான் ஒரு வியாபாரி வைத்துக் கொள்ளலாம்; உபயோகப் படுத்தலாம். பொது ஜனங்களும் இவைகளைத்தான் உபயோகப்படுத்தலாம். ஆனால் மேற்கண்ட எடை அளவைகளில் பல கொண்டதோ ஒரு பாகம் கொண்டதோ உள்ள எடை அளவைகளைச் சர்க்காரோ அதிகாரம் பெற்ற அதிகாரியோ சென்னை கெஜட்டில் பிரசுரம் செய்து அவைகளையும் இனி அங்கீகாரம் செய்யலாம். [3 (2)]

நான்கு விஷயங்களை வியாபாரிகள் கவனிக்க வேண்டும்:

வியாபாரிகள் வைத்துக்கொண்டு உபயோகப்படுத்தும் எடைகளும் அளவைகளும்

(1) இச்சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பெயருள்ளவையாக இருக்க வேண்டும். வேறு பெயர் உள்ளவை கூடா. எடை அல்லது அளவுகோல் மீது அதன் பெயரும் விவரமும் காணப்படவேண்டும். (அதாவது ஒரு மதராஸ் சேர்; ஒரு மதராஸ் படி; 1 கெஜம் இப்படி) [5 (1)]

(2) இவை ஒவ்வொன்றும் சரிப்பார்க்கப்பட்டு, சர்க்கார் முத்திரை போடப்பட்டிருக்க வேண்டும். [5 (1)]

(3) எடைகளும் அளவைகளும் பிசகாகவும் குறைவாகவும் இருத்தல்கூடாது.

(4) தராசு, பாலன்ஸ், வேயிங்மெஷீன் போன்ற எடை போடும் கருவிகளும் அளவை கருவிகளும் சரி பார்க்கப்பட்டு, அங்கீகரிக்கப் பட்ட எடைஅளவை மட்டில் காண

பிக்கக் கூடியதாய் இருப்பதுடன் அவைகளிலும் சர்க்கார் முத்திரை போடப்பட்டிருக்கவேண்டும். [5(12)]

சர்க்கார் செய்யும் ஏற்பாடுகள் :

இச்சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எடை அளவைகளை மாதிரிக்குச் சர்க்கார் தயார் செய்து, ரெவின்யூ போர்டில் ஒரு செட்டும், ஒவ்வொரு ஜில்லா கலெக்டரிடம் ஒரு செட்டும் வைத்திருப்பார்கள். அவைகளைச் சரி பார்க்கவும் முத்திரை போடவும் ஏற்பாடு செய்து, உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் படுவார்கள். இவ்விஷயமாய்ச் சர்க்கார் விதிகள் ஏற்படுத்துவார்கள். [4] ஒவ்வொரு எடை, அளவு, தராசு, முதலிய கருவிகளையும் சரிபார்த்துச் சர்க்கார் முத்திரை போடவும் உத்தியோகஸ்தர்கள் நியமிப்பார்கள். அங்கீகரிக்கப்பட்ட எடை, அளவை ஒவ்வொன்றிலும் அதன் பெயர் விவரமும் சர்க்கார் முத்திரையும் இருக்கவேண்டும். மிகச் சிறிய எடைகளில் எழுத்து வெட்ட முடியாமல் இருப்பவைகளை இந்த சட்டத்திலிருந்து சர்க்கார் விலக்கி, அதைக் கெஜட்டிலும் பிரசுரம் செய்வார்கள். தராசு, பாலன்சு, வேயிங் மெஷீன் போன்ற எடை கருவி, அளவு கருவிகளும் சட்டப்படிக்குள்ள எடை அளவு மட்டில் காட்டக்கூடியதாய், சரிபார்க்கப்பட்டுச் சர்க்கார் முத்திரையும் இருக்கவேண்டும். [5]

சட்டத்தை அமுல் நடத்த :

இச்சட்டத்தை அமுல் நடத்த, சர்க்கார் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கலாம். [6] இன்ஸ்பெக்டர்வியாபாரியிடமிருக்கும்எடைகள், அளவைகள்,தராசு முதலிய கருவிகளை சோதனைசெய்யலாம்; அதற்காக வியாபார ஸ்தலத்திலும், வீட்டிலேயே வியாபாரம் நடந்தால் வீட்டிலும் பிரவேசிக்கலாம். [7] அங்கீகரிக்கப் படாத, முத்திரையில்லாத தவறான எடை, அளவை, தராசு முதலிய கருவிகளை அவர் கைப்பற்றி மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒப்புவிக்கலாம்; மாஜிஸ்ட்ரேட் இவைகளைப் பறிமுதல் செய்யலாம். [8]

தண்டனைகள் :

இச்சட்டம் அமுலுக்கு வந்து 6 மாதத்திற்குப் பிறகு வியாபாரத்தில் (1) அங்கீகாரமாகாத முத்திரை போடாத எடை அளவைகளையும் (2) அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தாலும் சரிபார்த்ததின் பேரில் பிசகான அல்லது பொய்யான எடை அளவைகளையும்' (3) எடை போடும் கருவிகள் அதாவது ஸ்பிரிங் பாலன்சு, வேயிங்மெஷீன் போன்ற கருவிகளும் அளக்கும் கருவிகளும் அங்கீகரிக்கப்பட்ட எடை அளவை மட்டில் அனுசரித்து சரிப்படுத்தப் படாமல் வேறு எடை அளவை காண்பிக்கக்கூடியதாக இருந்தாலும், (4) தராசு, வேயிங் மெஷீன் போன்ற எடை கருவிகளிலும், அளவு கருவிகளிலும், சர்க்கார் முத்திரை இடப்படாததாக இருந்தாலும், மேற்கண்டவைகளை வைத்திருந்தாலும் உபயோகப் படுத்தினாலும் குற்றம். முதல்குற்றத்திற்கு ரூ. 1000 வரை அபராதமும் மறுமுறை குற்றத்திற்கு ஒருவருஷம் தண்டனையும் அபராதமும் விதிக்கலாம். [9]

உதாரணம் : (1) ஒரு வியாபாரி 2 வீசை படிக்கல்வைத்திருக்கிறார். அதனால் நிறுக்கிறார். ஒரு "வீசை" படிக்கல்தான் இச்சட்டத்தின் ஷெடியூலில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் 2 வீசை படிக்கல்லை வைத்திருப்பதும் குற்றம், உபயோகப்படுத்துவதும் குற்றம். [9 (1)]

(2) ஒரு வியாபாரி சரியான நிறையுள்ள "வீசை" படிக்கல் வைத்திருக்கிறார். அதைக்கொண்டு நிறுக்கிறார். நிறை குறையவில்லை. ஆனால் அதில் சர்க்கார் முத்திரை இல்லை. இதை வைத்திருப்பதும் குற்றம். உபயோகப்படுத்துவதும் குற்றம். [9 (2)]

(3) ஒரு வியாபாரி முத்திரை போட்ட ஒரு வீசை படிக்கல் வைத்திருக்கிறார். இன்ஸ்பெக்டர் சோதனை செய்ததில் நிறை குறைகிறது. சட்டத்தின் ஷெடியூல்படி வீசை என்பது 5 மதராஸ் சேர் அல்லது 120 ஸ்டாண்டர்ட் தோலா இருக்கவேண்டும். சோதனையில் 118 தோலாதான் இருக்கிறது. இந்தத் தவறான படிக்கல்லை வைத்திருப்பதும் உபயோகப் படுத்துவதும் குற்றம். [9 (2)]

(4) ஒரு வியாபாரி ஒரு ஸ்பிரிங் பாலன்சு அல்லது எடை போடும் மெஷீன் வைத்திருக்கிறார். இது அங்கீகரிக்கப்பட்ட எடையைக் காட்டாமல் வேறு எடைகளைக் காட்டக்கூடியது. இதுவும் குற்றம். [9 (3)]

(5) ஒரு வியாபாரி முத்திரை போடப்படாத தராசு வைத்து அதனால் நிறுத்துக் கொடுக்கிறார். நிறை சரியாக இருக்கிறது. இருந்தாலும் தராசு முத்திரை போடாமலிருப்பதால் இதை வைத்திருப்பதும் உபயோகப்படுத்துவதும் குற்றம். [9 (4)]

(6) ஒரு வியாபாரி முத்திரை போட்ட தராசு வைத்து உபயோகப் படுத்துகிறார். இன்ஸ்பெக்டர் சோதனை செய்ததில் சரியாக அளவு காண்பிக்கவில்லை. இந்தத் தராசை வைத்திருப்பதும் குற்றம்; உபயோகப்படுத்துவதும் குற்றம். [9 (4)]

முத்திரை போட அதிகாரம் பெற்ற உத்யோகஸ்தர் தெரிந்து தவறாக முத்திரை போட்டால் குற்றம். அவருக்கு ஒரு வருஷ தண்டனையும் அபராதமும் விதிக்கலாம். [10]

அதிகாரமில்லாதவர் முத்திரை போட்டால் எடை முதலியவை சரியாக இருந்தாலும் அவர் செய்வது குற்றம். அவருக்கு ரூ. 500 வரை அபராதமும் போடலாம்; அவர் போடும் எடை முதலியவை சரியாக இல்லாவிட்டால் அவருக்கு ஒரு வருஷ தண்டனையும் அபராதமும் போடலாம். [11]

சர்க்கார் முத்திரை போல் கள்ளத்தனமாகப் போலி முத்திரை போடுபவருக்கு 3 வருஷ தண்டனையும் அபராதமும் விதிக்கலாம். [12] தராசு, படிக்கல், படி, கஜக்கோல் முதலியவை விற்பனை செய்பவர் சர்க்காரால் ஏற்படுத்தப்படும் விதிகளின்படி சரி பார்க்கப்பட்டு முத்திரை குத்தப்பட்ட எடை, அளவை, தராசு முதலிய எடை கருவிகள், அளவை கருவிகளைத்தான் விற்க வேண்டும். இதற்கு மாறாக ஒருவர் விற்றாலும், வேறு ஒருவருக்குக் கொடுத்தாலும் அவர் குற்றம் செய்தவரே. அவருக்கு ரூ. 500 வரை அபராதம் போடலாம். [13] அப்படி விற்பவர் பொய்யான அல்லது குறைபாடுள்ள எடை அளவை தராசு முதலிய கருவிகளைச் செய்தாலும், விற்றாலும், கொடுத்தாலும் முதல் குற்றத்திற்கு ரூ. 1000 வரை அராதமும், மறுமுறை குற்றத்திற்கு ஒரு வருஷம் தண்டனையும் அபராதமும் விதிக்கலாம். [14]

வியாபாரத்தில் விற்கும் பொருள் எடை அல்லது அளவு குறைவாக இருந்தால் குற்றம். இதற்கு ரூ. 300 வரை அபராதம் விதிக்கலாம் [15] இன்ஸ்பெக்டர் பார்வையிடும்போது எடை, அளவை, தராசு முதலியவற்றைக் காட்ட மறுத்தாலும் அவர் பரிசோதிப்பதைத் தடுத்தாலும், அனுமதி கொடுக்க மறுத்தாலும், அசட்டையாக இருந்தாலும் குற்றம். இன்ஸ்பெக்டர் பிரவேசிப்பதைத் தடுத்தாலும் குற்றம். இவைகளுக்கு ரூ. 500 வரை அபராதம் போடலாம். [16]

இச்சட்டப்படி குற்றமான செய்கையை ஒரு குழந்தை மூலம் செய்யும் பெற்றோரும், முதலாளியும் அவர்களே குற்றம் செய்பவராவர். [17]

இச்சட்டத்தை மீறிய குற்றத்திற்காக இன்ஸ்பெக்டரும், நஷ்டமடைந்த நபரும் கம்ப்ளெயிண்ட் கொடுக்கலாம். [18]

சில ஒப்பந்தங்கள் செல்லாது-தஸ்தாவேஜிகள் ரிஜிஸ்டராகாது: இச்சட்டம் அமுலுக்கு வந்தபிறகு பொது ஜனங்களும் வியாபாரிகளும் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும் (எக்ரிமெண்ட், காண்ட்ருக்ட்) முதலிய எழுதப்படும் தஸ்தாவேஜிகளும் இச்சட்டத்தில் அங்கீகாரமான எடை அல்லது அளவைகளை அனுசரித்தே இருக்க வேண்டும். அப்படி செய்து கொள்ளப்படாவிட்டால் அது செல்லாது. அவ்விதம் இல்லாத தஸ்தாவேஜிகளும் ரிஜிஸ்டர் ஆபீசுகளில் ரிஜிஸ்டர் ஆகாது.

உதாரணம்: (1) இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு ஒருவியாபாரி ஒரு "பாரம்" பரித்திக்கொட்டை விற்பதாக மற்றொரு வியாபாரியிடம் எக்ரிமெண்ட் செய்துகொள்கிறார். "பாரம்" என்ற எடை இச்சட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த எக்ரிமெண்ட் செல்லாது. ரிஜிஸ்டரும் ஆகாது.

(2) இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, ஒருவர் ஒரு வீடு கிறயத்திற்கு வாங்கி கிறய சாசனத்தில் வீட்டின் நீளம் "காலடியால் 250" என்று அல்லது "25 கோல்" என்று எழுதி இருக்கிறது. இந்த சாசனம் செல்லாது. ரிஜிஸ்டரும் ஆகாது. ஏனென்றால் "காலடி, கோல்" இவை அங்கீகாரமான அளவை அல்ல.

(3) இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, ஒரு மிருசுதார் வாங்கும் குத்தகைபத்திரத்தில் குத்தகை நெல் 150 கலம் 6 மரக்கால் என்றிருக்கிறது. இது செல்லாது. ரிஜிஸ்டராகாது. "கலம், மரக்கால்" சட்டத்தில் அங்கீகாரமானவை அல்ல.

ஆனால் மேல்கண்ட எடை அளவைகளை இனி சர்க்கார் [3(2)] படி அங்கீகரிக்கலாம்.

விதிகள் செய்ய அதிகாரம்: இச்சட்டத்தை நடைமுறையில் நடத்தச் சர்க்கார் விதிகள் செய்யலாம். [21]

இதர சட்டங்கள்: இச்சட்டத்தின் நிபந்தனைகள் எடைகள், அளவைகள், கருவிகள், இவைகளைக் குறித்து வேறு சட்டங்கள் செலவாணியாக இருந்தால் அவற்றிற்கு அதிகப்படியாக இச்சட்டத்தைக் வைத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய அவற்றை ரத்து செய்வதாக ஆகாது. [22]

ஷெட்யூல்

(3-வது பிரிவைப் பார்க்கவும்)

I-ம் பாகம் எடைகள்

I. பொது உபயோகத்துக்காக:

(a) பலம்-3 பரிமாண தோலா கொண்ட ஓர் எடை.

(b) மதராஸ் சேர்-8 பலம் அல்லது 24 பரிமாண தோலா கொண்ட ஓர் எடை.

(c) வீசை-5 மதராஸ் சேர் அல்லது 120 பரிமாண தோலாகொண்ட ஓர் எடை.

(d) மதராஸ் மணங்கு-8 வீசை அல்லது 960 பரிமாண தோலா கொண்ட ஓர் எடை

(e) கண்டி-20 மதராஸ் மணங்கு அல்லது 19,200 பரிமாண தோலா கொண்ட ஓர் எடை.

II. பொன், வெள்ளி வியாபாரத்தில் உபயோகிக்கப்படுவதற்காக:

(a) பரிமாண தோலாவின் அடியிற் கண்ட மடங்குகள்; அவையாவன:

2, 3, 4, 5, 10, 20, 30, 50, 100, 200, 300, 500, 1,000, 2,000.

(b) பரிமாண தோலாவின் அடியிற் கண்ட காரணப் பகுதிகள்; அவையாவன:

$\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$, $\frac{1}{32}$.

III. ரத்தின வியாபாரத்திலும் முத்து வியாபாரத்திலும் உபயோகிக்கப்படுவதற்காக:

(a) காரட் (Carat)- ஒரு பரிமாண தோலாவின் $\frac{1}{120}$ பாகத்துக்குச் சமமான ஓர் எடை.

(b) காரட்டின் அடியிற்கண்ட மடங்குகள்; அவையாவன:— 2, 3, 4, 5, 6, 8, 10, 12, 15, 20, 30, 40, 60.

(c) காரட்டின் அடியிற்கண்ட காரணப் பகுதிகள்; அவையாவன:

$\frac{1}{2}, \frac{1}{4}, \frac{1}{5}, \frac{1}{8}, \frac{1}{10}, \frac{1}{16}, \frac{1}{20}, \frac{1}{50}, \frac{1}{100}$.

IV. மருந்து வியாபாரிகளின் தொழிலில் உபயோகிக்கப்படுவதற்காக:

(a) ட்ராம் (Drachm)-60 பரிமாண க்ரெய்னுக்குச் சமமான ஓர் எடை.

(b) அவுன்ஸ் (Ounce)-8 ட்ராம் அல்லது 480 பரிமாண க்ரெய்னுக்குச் சமமான ஓர் எடை.

(c) அவுன்ஸின் அடியிற்கண்ட மடங்குகள்; அவையாவன: 2, 4, 6, 8, 10.

(d) அவுன்ஸின் அடியிற்கண்ட காரணப் பகுதிகள்; அவையாவன: $\frac{1}{2}, \frac{1}{4}, \frac{1}{8}, \frac{1}{16}$.

(e) ஸ்க்ரூப்பில் (Scruple)-20 பரிமாண க்ரெய்னுக்குச் சமமான ஓர் எடை.

(f) இரண்டு ஸ்க்ரூப்பில்-40 பரிமாண க்ரெய்னுக்குச் சமமான ஓர் எடை.

(g) அரை ஸ்க்ரூப்பில்-10 பரிமாண க்ரெய்னுக்குச் சமமான ஓர் எடை.

II-ம் பாகம்

நீட்டலளவையும் பரப்பலளவையும்

(a) நீட்டலளவைகளைக் குறித்த 1889-ம் வருஷத்திய சட்டத்தில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள பரிமாண அங்குலம், பரிமாண அடி, பரிமாண கெஜம்.

(b) லின்க் (Link)-7·92 பரிமாண அங்குலம் கொண்ட ஒரு நீட்டலளவை.

(c) செயின்-100 லின்க் அல்லது 22 பரிமாண கெஜம் கொண்ட ஒரு நீட்டலளவை.

(d) பர்லாங்கு-220 பரிமாண கெஜம் கொண்ட ஒரு நீட்டலளவை.

(e) மைல்-8 பர்லாங்கொண்ட ஒரு நீட்டலளவை.

(f) சதுர அங்குலம்-ஒரு பரிமாண அங்குலத்தின் சதுரமாகும்.

(g) சதுரஅடி-ஒரு பரிமாண அடியின் சதுரமாகும்.

(h) சதுர கெஜம்-ஒரு பரிமாண கெஜத்தின் சதுரமாகும்.

(i) ஏகரா-4840 சதுரகெஜம் கொண்ட ஒரு விஸ்தீரணம்.

III-பாகம்

கன அளவைகள்

I. பொது உபயோகத்துக்காக:

(a) கன அங்குலம்-ஒரு பரிமாண அங்குலத்தின் கன சதுரமாகும்.

(b) கன அடி-ஒரு பரிமாண அடியின் கன சதுரமாகும்.

(c) கன கெஜம்-ஒரு பரிமாண கெஜத்தின் கன சதுரமாகும்.

(d) மதராஸ் படி-108 கன அங்குலத்துக்கு ($62\frac{1}{2}$ திரவ அவுன்சுக்கு) சமமானதாகும்.

(e) மாதிரிசேர்-(Type Seer) 72 கன அங்குலத்துக்கு (41 2/3 திரவ அவுன்சுக்கு) சமமானதாகும்.

குறிப்பு:—மூன்று மாதிரி சேர் இரண்டு மதராஸ் படிகளுக்குச் சமமானதாகும்.

(f) திரவ அவுன்ஸ்-ஒரு கன அடியில் $\frac{1}{1000}$ பாகத்துக்குச் சமமானதாகும்.

குறிப்பு:—காற்று இல்லாமல் காய்ச்சி வடிக்கப்பட்டதும் 62 பாரன்ஹீட் டிகிரி வெப்பமுள்ளதுமான ஒரு திரவ அவுன்ஸ தண்ணீரின் எடை ஏறக்குறைய 437·5 பரிமாண க்ரெய்ன் ஆகும்.

(g) பைன்ட் (Pint)-20 திரவ அவுன்சுக்குச் சமமானதாகும்.

(h) க்வார்ட்-2 பைன்டுக்குச் சமமானதாகும்.

(i) காலன்-4 க்வார்ட்டுக்குச் சமமானதாகும்.

(j) புஷல்-8 காலனுக்குச் சமமானதாகும்.

II. மருந்து வியாபாரிகளின் தொழிலில் உபயோகிப்பதற்காக:

(a) திரவ அவுன்ஸ்-மேலே அர்த்தம் சொல்லப்பட்டபடி.

(b) திரவ அவுன்ஸின் அடியிற்கண்ட மடங்குகள்; அவையாவன: 2, 4, 6, 8, 10, 12, 16, 24, 32.

(c) திரவ ட்ராம்-ஒரு திரவ அவுன்ஸின் $\frac{1}{8}$ பாகத்துக்குச் சமமானதாகும்.

(d) திரவ ட்ராமின் அடியிற்கண்ட மடங்குகள்; அவையாவன: 2, 3, 4.

(e) மினிம் (Minim)-திரவ ட்ராமின் $\frac{1}{60}$ பாகத்துக்குச் சமமானதாகும்.

(f) மினிம் என்னும் அளவின் அடியிற்கண்ட மடங்குகள்; அவையாவன:

2, 3, 4, 5, 10, 20, 30.

கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன் - விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

உணவுத் தானியம்

உணவுத் தானிய வர்த்தகத்துக்கான லைசென்ஸ் 10 மணங்குக்குமேல் லைசென்ஸ் வேண்டும்.

குறைந்தபட்ச அளவு நிர்ணயம்.

1947-ஆம் வருஷத்திய சென்னை உணவுத் தானிய கட்டுப்பாடு உத்தரவின்கீழ் கோதுமை, நெல், அரிசி, சோளம், கம்பு, ராகி, கொள்ளு, மக்காச்சோளம் ஆகிய தானியங்களை ஒரே முறையில் 20 இம்பீரியல் மணங்குக்கு மேற்பட்ட அளவில் வாங்கவோ, விற்கவோ அல்லது விற்பனைக்காகச் சேமித்து வைக்கவோ விரும்புவோர் லைசென்ஸ் பெறவேண்டியது அவசியமாகும். 25 இம்பீரியல் மணங்குக்கு மேற்பட்ட எந்த மேற்சொன்ன தானியத்தையாவது சேமித்துவைப்பது குற்றமாகும். (உணவுத் தானியத்தை அவ்வளவு அளவுக்குச் சேமித்துவைப்பது விற்பதற்காகவே என்று கருதப்படுமாதலால்) 1947-ஆம் வருஷத்திய சென்னை உணவுத் தானிய கட்டுப்பாடு உத்தரவின்கீழ் 20 மணங்கும் அதற்கு மேற்பட்ட அளவும் ஸ்டாக் வைத்துள்ள லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளின் ஸ்டாக்கைச் சர்க்கார் அளவெடுக்கக்கூடும். 20 இம்பீரியல் மணங்குக்குக் குறைந்த அளவுள்ள தானியங்களை விற்கும் வியாபாரிகளிடமுள்ள ஸ்டாக்கைப்பற்றிச் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டுவரப்படுவதில்லை. இந்த 20 மணங்கு அளவை ஆதாரவாகக் கொண்டு பெருவாரியான அளவுள்ள தானியத்தை வியாபாரிகள் பிளாக் மார்க்கெட்டில் விற்கிரயஞ் செய்கிறார்கள் என்று சர்க்கார் நம்புவதற்குப் போதிய காரணங்கள் உள. அதனால் சர்க்கார், சிறுசிறு வர்த்தகர்கள் லைசென்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்யக்கூடிய தானிய அளவை 10 மணங்குக்குக் குறைப்பதென யோசித்து உடனுக்குடனாக அமல்நடத்த 1947-ஆம் வருஷத்திய சென்னை உணவுத் தானியக் கட்டுப்பாடு உத்தரவைக் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கத் தீர்மானித்துள்ளார்கள் :—

1. வருங்காலத்தில் 10 மணங்குக்கு மேற்பட்ட அளவில் உணவுத் தானியங்களை விற்கும் வர்த்தகர்கள் 1947-ஆம் வருஷத்திய சென்னை உணவுத் தான்ய கட்டுப்பாடு உத்தரவின் கீழ் ஒரு லைசென்ஸ் வைத்திருக்க வேண்டும். இப்போது இருப்பது போல 20 மணங்குக்கு மேற்பட்ட அளவல்ல.

2. வருங்காலத்தில் 15 மணங்குக்கு மேற்பட்ட அளவுள்ள உணவுத்தானியங்களை யார் சேமித்தாலும், அவர் அதை விற்பதற்காகச் சேமித்து வைக்கிறார் என்று கருதப்படுவார். (சேமிப்பு அதற்காகவல்லவென்று அவர் ருசு படுத்தினாலொழிய,) 15 மணங்குக்கு மேற்பட்ட அளவு; இப்போது இருப்பதுபோல் 25 மணங்குக்கு மேற்பட்ட அளவல்ல.

குறிப்பு:—தாமே அல்லது தமது குத்தகைக்காரரே உற்பத்தி செய்த எந்த உணவுத் தானியத்தையும் ஒருவர் விற்றாலும் விற்கச் சேமித்தாலும் அவரை இந்நிர்ப்பந்தங்கள் பாதிக்கமாட்டா.

(சென்னை சர்க்கார் கெஜட் 4—1—1949)

அரிசி மில் லைசென்ஸ் கட்டளை
சில ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்கப்படுகிறது

1947-ஆம் வருஷத்திய சென்னை அரிசி மில் லைசென்ஸ் கட்டளை 1948-ஆம் வருஷ நவம்

பர் மீ 20வ முதற் கொண்டு கீழ்க்கண்ட ஜில்லாக்களில் வியாபிக்கும் என்று சென்னை சர்க்கார் விதித்துள்ளார்கள்.

தென் கன்னடம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, மதுரை, அனந்தபூர், கடப்பை, கர்நூல், பெல்லாரி, வட ஆற்காடு, செங்கற்பட்டு, கோயமுத்தூர், விசாகப்பட்டினம், ராமனாதபுரம், சித்தூர், சேலம்.

உணவுத் தானியங்கள் கட்டுப்பாடு

ஜில்லா உணவு கமிட்டிகள் புனருத்தாரணம் செய்யப்படும்

உணவுத் தானியங்கள், இன்னும் இதர அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் மீது கட்டுபாட்டை மறுபடியும் புகுத்த வேண்டு மென்னும் தீர்மானத்துக் கேற்ப, மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் ஜில்லா உணவு கமிட்டிகளையும், சட்ட ரீதியான பங்கீட்டு முறை எங்கெங்கு மீண்டும் புகுத்தப்படுகிறதோ அங்கங்கே பங்கீட்டு ஆலோசக கமிட்டிகளையும் புனருத்தாரணம் செய்ய சர்க்கார் முடிவு செய்துள்ளார்கள்.

அரிசி மில்-சில உத்தியோகஸ்தர்களுக்கு புதிய அதிகாரம் - ஜில்லா கலெக்டர் லைசென்சை ரத்து செய்யலாம்:—

சென்னை அரிசி மில்கள் லைசென்சு உத்திரவு (1947) 6-வது பிரிவின் படி சென்னை சிவில் சப்ளை கமிஷனர், இதனடியில் கண்ட உத்தியோகஸ்தர்களுக்கு, அவரவர்கள் அதிகார எல்லைக்குள் இருக்கும் அரிசி மில்களில் பிரவேசிக்கவும், சோதனை செய்யவும், லைசென்சு வாங்கியவர்களுடைய கணக்குகள், நெல், அரிசி ஸ்டாக்கு எங்கே வைக்கப்பட்டிருந்தாலும் அவைகளை சோதனை செய்யவும், பரிக்ஷைக்காக மாதிரி எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் கொடுத்திருக்கிறார். இவ்விதம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்கள் விவரம் (1) ரிவன்யூ டிபார்ட்மெண்டில் டிப்டி தாசில்தாருடைய அந்தஸ்துக்கு மேலே உள்ள எல்லா அதிகாரிகளுக்கும் (2) வர்த்தக வரி டிபார்ட்டுமெண்டில் உதவி வர்த்தக வரி அதிகாரிக்கு மேல் அந்தஸ்துள்ள எல்லா அதிகாரிகளுக்கும் (3) விவசாய டிபார்ட்டுமெண்டில் உதவி விவசாய டிமான்ஸ்ட்ரேடர், மார்கெட்டிங் ஆபீசர் இவர்களுக்கு மேல் அந்தஸ்துள்ள எல்லா நிர்வாக அதிகாரிகளுக்கும் மேற் கண்டபடி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தவிர அரிசி மில் லைசென்சு உத்திரவு (1947) 5 வது பிரிவின்படி ஒவ்வொரு ஜில்லா கலெக்டருக்கும் அவரவர்கள் அதிகார எல்லைக்குட்பட்டு அரிசி மில் லைசென்சுகளை ரத்து செய்யவும் சஸ்பெண்டு செய்யவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(1—3—49 சென்னை சர்க்கார் கெஜட் II-பார்ட் பக்கம் 201)

ரேஷன்

புதிய 12 அவுன்ஸ் ரேஷன் உத்தரவு பங்கீடு அதிகாரி விளக்கம்

சென்னை மார்ச்சு 7உ உணவு தான்ய ரேஷனை உயர்த்தி சமீபத்தில் வெளியான உத்திரவை விளக்கி மாகாண உணவு பங்கீடு கண்ட்ரோலர் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார்:

ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 12 அவுன்ஸ் ரேஷன் அல்லது 12 அவுன்ஸ் ரொட்டியும் 2 அவுன்ஸ் ரவையும்.

2 அவுன்ஸ் ரவை போக பாக்கி 10 அவுன்ஸில் அரிசியின் பகுதிக்கோ அல்லது இதர உப தானியங்களின் பகுதிக்கோ ரொட்டி வாங்கிக்கொள்ளலாம்

வழக்கமாக கோதுமை சாப்பிடுகிறவர்களுக்கும் வைத்திய காரணங்களை முன்னிட்டு கோதுமை சாப்பிடுகிறவர்களுக்கும் 10 அவுன்ஸ் கோதுமை, 2 அவுன்ஸ் ரவை அல்லது 12 அவுன்ஸ் ரொட்டியும் 2 அவுன்ஸ் ரவையும் தரப்படும்.

ரேஷன் கார்ட் வைத்திருப்பவர்களுக்கு என்ன அளவு குறிப்பிடப்பட்டுள்ளதோ அது சாப்பாடு ஹோட்டல்கள் போன்றவைகளுக்கும் பொருந்தும்.

தங்கள் பங்கீட்டில் ஒரு பகுதியாக ரவை பெறலாம் என்பது கிராமாந்திரங்களில் உள்ளவர்களுக்குத் தெரியாததாலேயே ரவை அதிகம் வாங்கப்படவில்லை எனத் தோன்றுகிறது. எல்லா ரேஷன் கடைகளிலும் ரவை கிடைக்கச் செய்வதே இதற்கு வழி. எனவே, எல்லா ரேஷன் கடைகளுக்கும் குறைந்த பக்ஷம் முதலெடுப்பில் பட்டணம் படி 10 படி ரவையாவது கொடுக்கும்படி எல்லா கலெக்டர்களுக்கும் பங்கீட்டு அதிகாரிகளுக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது. பிறகு கடைக்காரர்கள் அவரவர்கள் தேவைக் கேற்ப பெற்றுக் கொள்ளலாம். ரவை கிடைக்கவில்லை என்ற புகார் வராமல் பார்த்துக் கொள்ளும்படியும் சொல்லப் பட்டிருக்கிறது.

1947 சென்னை பங்கீடு உத்தரவு 2 (4) (டி) (11) (111) ஷரத்துக்குள் வராத போஜன விடுதிகளுக்கு ரேஷனின் யூனிட் மதிப்பு முன்போல் 5 அவுன்ஸாகவே இருக்கும்.

விலை நிர்ணயம்

நெல் விலை

நெல் கொள்முதல் கிராம விலை

தஞ்சை ஜில்லா சப்ளை அதிகாரியின் விளக்கம்

தஞ்சை ஜில்லா சப்ளை அதிகாரி கீழ்க் கண்ட அறிக்கை விடுத்திருக்கிறார். தஞ்சை ஜில்லாவில் நெல்லிற்கு 1948-49-ஆம் வருஷத்திற்கு (21—11—48 முதல்) சர்க்கார் நிர்ணயித்திருக்கும் "கிராம விலைகள்" சம்பந்தமாக உற்பத்தியாளருக்கும் கொள்முதல் வியாபாரிகளுக்கும் சில அபிப்பிராய பேதங்கள் இருப்பதாக கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராய பேதங்களை தெளிவு படுத்த இந்த அறிக்கை விடப்படுகிறது.

(1) 21—11—48லிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள கிராம விலைகள் $82\frac{2}{7}$ பவுண்டுகள் கொண்ட ஒரு இம்பீரியல் மணங்கிற்கான அதிக பட்ச விலைகள். இந்த அதிக பட்ச விலைகள் சமீபத்திலுள்ள நெல் அரிசி ஏற்றுமதி செய்யும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மூன்று மைலுக்கு உட்பட்ட கிராமங்களுக்கு மட்டுமே செல்லும். இந்த ஸ்டேஷன்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கு நெல்லுக்கு உண்டான அதிகபக்ஷ விலையிலிருந்து மணங்கு ஒன்றுக்கு மைல் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ தம்படி வீதம் குறைக்கப்படும்.

(2) அந்த அதிகபக்ஷ விலைகள் சென்னை சிவில் சப்ளை கமிஷனரால் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் அடியிற் கண்ட பரிமாண லட்சணங்கள் உள்ள நெல்லுக்குச் செல்லுபடியாகும்.

நெல்லுக்குண்டான லட்சணங்கள்

நெல் உலர்ந்ததாயும், பதர், வைக்கோல், மண், மணல், கல், தூசி முதலிய அன்னியப் பொருள்கள் நீக்கப்பட்டு வந்ததாயும் இருக்க வேண்டும்.

மேலே கண்ட லட்சணங்கள் குறைவாக உள்ள நெல்லுக்கு அதன் லட்சணத்திற் கேற்றபடி அந்த நெல்லின் அதிகபக்ஷ

விலையில் தகுந்தபடி குறைவு செய்யப்படு மென்று அறிவிக்கப்படுகிறது.

[குறிப்பு:— நேயர்களின் சௌகரியத்துக்காக 21—11—48 முதல் சர்க்கார் நிர்ணயித்திருக்கும் 1 இம்பீரியல் மணங்கு நெல்லின் கிரும விலையை கீழே கொடுத்திருக்கிறோம்.]

ஜில்லா	தரம்	ரூ.	அ.	பை.
தென் ஆற்காடு	I தரம்	8	5	6
	II தரம்	7	14	6
	குருவை	7	10	3
தஞ்சாவூர்	I தரம்	8	5	0
	II தரம்	7	14	3
	குருவை	7	10	0
திருச்சிருப்பள்ளி	I தரம்	8	7	9
	II தரம்	8	0	9
	குருவை	7	12	3
மதுரை	I தரம்	9	1	6
	II தரம்	8	10	9
திருநெல்வேலி	I தரம்	8	14	6
	II தரம்	8	7	9

காகிதம்

அச்சாபீஸ்காரர்களுக்கு செலவாகும் கடிதாசிகள் விவரம் சமர்ப்பித்தல்

1945-ஆம் வருஷத்திய மதராஸ் காகித கட்டுப்பாடு (லைசென்ஸ், சிக்கனம், விநியோகம்) கட்டளை (நெம்பர் II) ரத்து செய்யப்பட்ட போதிலும், இந்திய சர்க்கார் பிறப்பித்த 1945-ஆம் வருஷத்திய காகித கட்டுப்பாடு (சிக்கனம்) கட்டளைகளும், விலை கட்டுப்பாடு கட்டளையும் தொடர்ந்து அமுலில் இருந்து வருகின்றனவென்று 1948ஆம் வருஷம் ஏப்ரல்மீ 1வ சர்க்கார் வெளியிட்ட அறிக்கை எல்லா அச்சக முதலாளிகள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

1945-ஆம் வருஷத்திய கடிதாசி கட்டுப்பாடு (சிக்கனம்) கட்டளையின் 13-ஆம் பிரிவின்படி அச்சக முதலாளிகள், மாகாணத்து பேப்பர் கண்ட்ரோலருக்கு அதாவது, சென்னை, கிளப் ஹௌஸ் ரோட்டில், "ருஷ்கைரம்" என்னும் இடத்தில் காரியாலயம் வைத்திருக்கும் கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களின் கண்ட்ரோலருக்கு, ஜனவரிமீ 1வ யிலிருந்து ஒவ்வொரு கால் வருஷ ஆரம்பத்தில் 15வக்குள், முந்திய கால் வருஷ காலத்துக்குள் நியூஸ் பிரின்ட் தவிர இதர கடிதாசிகள் தங்களிடத்தில் இருந்த அளவு, வாங்கிய அளவு, செலவழித்த அளவு, வேறு வழிகளில் விநியோகித்த அளவு, விவரங்கள் ஆகியவற்றை ஷை கட்டளையில் இரண்டாம் ஷெடியூலில் உள்ள முதல் பாரத்தில் எழுதி சமர்ப்பிக்க வேண்டியது. அத்தகைய கடிதாசி செலவழியாமலும் விநியோகிக்கப்படாமலும் இருந்தால் "ஒன்றுமில்லை" என்பதாகத் தெரிவித்து விட வேண்டியது.

அச்சக முதலாளிகளில் அநேகர், கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களின் கண்ட்ரோலருக்கு அவ்வாறு சமர்ப்பிக்காததால், பிராது தொடர்வதற்கு உட்பட்டவர்களாகியுள்ளார்கள். அச்சக முதலாளிகள் யாவரும் வருங்காலத்தில் குறித்த தேதிக்குள் தவறாமல் ஷை கடிதாசி விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இனி ஷை விவரங்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் அவர்கள் மீது பிராது தொடரப்படுமென்று இதனால் எச்சரிக்கப்படுகிறார்கள்.

காகித வியாபாரிகளுக்கு

காகித சேமிப்பு சம்பந்தமாய்த் திருத்தப்பட்ட கட்டளைகள்: இந்தியாவிலுள்ள காகித மில்களிலிருந்து காகிதத்தை நேராகத் தருவிக்கும் ஒவ்வொரு காகித வியாபாரியும் பின் வரும் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

காகித வியாபாரி காகிதம் தருவித்த மூன்று நாட்களுக்குள் காகிதம் தருவித்த விஷயத்தையும், தருவித்த காகிதத்தின் விவரங்களையும், முக்கியமாய் அதன் விதங்களையும், ஒவ்வொரு விதத்தின் எடையையும் கட்டுப்படுத்தப்பட்ட சாமான்கள் சம்பந்தமான டைரெக்டருக்குத் தெரிவித்துவிட வேண்டும்.

ஜவுளி

கைத்தறி ஜவுளி ஏற்றுமதி தடை நீக்கப்பட்டது: பாகிஸ்தானைத் தவிர மற்ற அயல் நாடுகளுக்கு கைத்தறி ஜவுளிகள் நிபந்தனையன்னியில் அனுப்பவும், பாகிஸ்தானைப் பொறுத்த மட்டில் தற்காலம் 5 கோடி கஜம் துணி அனுப்பவும் மத்ய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

சென்னை பஞ்சு லைசென்சு உத்திரவு (1949): பஞ்சு ஒரு அத்தியாவசியப் பொருள் என்று அறிவித்து சென்னை சர்க்கார் 1946 ஆம் வருஷத்திய 14வது ஆக்ட் (அத்தியாவசிய பொருள்) (தற்காலிக) கட்டுப்பாடு சட்டப்படி மதராஸ்பருத்தி லைசென்சு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்திரவு அமல் வந்து 30 நாட்களுக்கு பிறகு எவரும் ஜில்லா கலெக்டரிடமோ அல்லது வேறு சர்க்கார் நியமிக்கும் அதிகாரியிடமோ லைசென்சு வாங்கிக் கொள்ளாமல் பஞ்சு வாங்கவும், விற்கவும், சேகரித்து வைக்கவும், வியாபாரம் செய்யவும், பஞ்சின் பேரில் கடன் கொடுத்து அதற்கு அடமானமாக வைத்துக் கொள்ளவும் கூடாது. வருடா வருடம் லைசென்சு புதிப்பித்துக் கொள்ள வேண்டும். அதற்கு கட்டணம் ரூ 5. லைசென்சு பெற்றிருந்தும் 6 மாத தேவைக்கு மேல் பஞ்சு வைத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் 24 பேலுக்குள் ஸ்டாக் வைத்திருப்பவருக்கும் பருத்தி உற்பத்தி செய்பவர் தன்னால் உற்பத்தி செய்ததை வைத்திருப்பதையும் பாதிக்காது. லைசென்சு பாரத்தில் லைசென்சு பெற்றவர் வைத்துக் கொள்ள வேண்டிய கணக்குகளும் அவர் அனுப்ப வேண்டிய ரிபோர்ட்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

(சென்னை சர்க்கார் கெஜட் 8—2—49 II பார்ட்)

ஜவுளி சுங்க வரி

விசைத்தறி துணிக்கு விலக்கு

இந்திய சர்க்கார் நிதி இலாகா அறிவிப்பதாவது: 1948 ஆம் பருத்தி ஜவுளி கண்ட்ரோல் உத்தரவிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கும் விசைத்தறி பாக்டரிகளில் உற்பத்தியாகும் ஜவுளிக்கு உள் நாட்டு சுங்க வரியிலிருந்தும் விலக்கு அளிக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

கைத்தறி ஜவுளிக்கு ஏற்கனவே விலக்கப் பட்டிருக்கிறது.

(11-3-49)

வாடகை ஜாகை கண்ட்ரோல் சட்டம்

இச்சட்டததை அனுசரித்து ஏற்பட்டிருக்கும் ரூல் 5 (3) படி வாடகை ஜாகை கண்டிரோலருக்கு ரிஜிஸ்டர் தபால் மூலம் மனுக்கள் அனுப்பலாம் என்றிருந்ததை இப்போது மாற்றி "தபால் அல்லது தந்தி மூலம் அனுப்பப்படும் தஸ்தவேஜிகளையும் நடவடிக்கைகளையும் வாடகை கண்டிரோலர் பெற்றுக் கொள்ளவும் பைல் செய்து கொள்ளவும் கூடாது" என்று மாற்றப் பட்டிருக்கிறது.

(சென்னை சர்க்கார் கெஜட் II பார்ட் ரூல் சப்ளிமெண்ட் 1—2—1949 பக்கம் 10)

லைசென்ஸ்

லைசென்ஸ் இல்லாமல் சில பொருள்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யலாம்

இது விஷயமாய் 7—3—49 தேதியுள்ள புது டில்லி சர்க்கார் குறிப்பு கூறுவதாவது: ஏற்றுமதி லைசென்ஸில்லாமல், கீழ்க்கண்ட பொருள்கள் தற்காலிகமாக இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உப்பு, ஸில்க், ஆர்ட் சில்க் (நூலைத்தவிர) உற்பத்தி சாமான்கள்; கம்பளி உற்பத்தி சாமான்கள், அலுமினியம், தையல்மெஷின்கள் (அவசியமானது); பித்தளைப் பாத்திரங்களும், அலங்காரப்பித்தளை சாமான்களும்; டார்ச் ஸெல்கள், கேஸ்கள்; பிரஷர் விளக்குகள்; சோப்புகள்; இயந்திரக் கருவிகள் (அவசியமானது); டீ செஸ்டுகள் (அவசிய

மானது); பஞ்சு, ரப்பர் பெல்டுகள் (அவசிய மானது); முறுக்கினடிரில்; ரீமர்ஸ் (அவசிய மானது); கான்வாஸ் செருப்புகள்; ரிக்ஷாக்கள்; ஸைக்கிள் ரிக்ஷாக்கள் (அவசியமானது); பல்புகள்; மின்சார ஸீலிங் விசிறிகள்.

மேற்கண்ட பொருள்கள் சம்பந்தமாகவும், கடுகெண்ணெய், தீப்பெட்டி, ஹரிக்கேன் விளக்குகள் சம்பந்தமாகவும், ஒரு கால வரையறை தேவையில்லை. ஆனால், கோட்டா முடிவுறும் சமயத்தில் சர்வ சாதரண ஏற்றுமதியின் கடைசி தேதி அறிவிக்கப்படும். இதற்கு நோட்டீஸ் 14 தினங்களுக்குக் குறைவாக இருக்காது. ஆகையால் குறுகிய காலத்துக்குள் அனுப்பும் சாமான்களை நிர்ணயித்துக் கொள்ளும்படி வர்த்தகர்களுக்கு யோசனை கூறப்படுகிறது. நீண்டகால ஏற்றுமதி சரக்குகளுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளாமலிருக்கும்படியும் கூறப்பட்டிருக்கிறது.

கடலைப் பிண்ணுக்கு கொள்முதல் கண்ட்ரோல் ரத்து; உச்ச விலையும் ரத்து: எண்ணெய்த் தொழில் உற்பத்தியாளரின் வேண்டுகோளையும், உணவுப் பயிர்களுக்கு எருவிட விவாசாயிகளுக்குக் கடலைப் பிண்ணுக்கு தற்காலம் அவசியத் தேவையாயிருப்பதையும் குறித்து சர்க்கார் சிரத்தையுடன் ஆலோசித்து, செக்குகளில் உற்பத்தியாகும் கடலை எண்ணெய் பிண்ணுக்கின் மீதுள்ள கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டும் என்றும் 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந் தேதியிலிருந்து, பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிண்ணுக்கின் உச்ச விலையை ரத்து செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளார்கள்:

(1) இந்தக் கட்டுப்பாடு நீக்கம் 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந் தேதியிலிருந்தும் அத்தேதிக்குப் பிறகும் செக்குகள் மூலமாய் உற்பத்தியாகும் பொருள்களுக்கு மட்டும் பொருந்தும். 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 14ந் தேதி முடிவில் செக்குக்கு உரியவர்களிடம் உள்ள, பிண்ணுக்கு ஸ்டாக்கில் உற்பத்தி செய்யப்பட்ட அளவில் 60 சத விகிதம் (அந்நாள் வரையில் அமுலில் இருக்கும் 40 சதவிகிதம் பிண்ணுக்கின் மீதுள்ள கட்டுப்பாடு நீக்கத்தின்படி) விவசாய இலாகாவால் கொள்முதல் செய்வதற்கு அனுகூலம் ஏற்படவேண்டும்.

(2) செக்குக்கு உடையவர்களும், வியாபாரிகளும் உற்பத்தி செய்யப்பட்ட பிண்ணுக்கு முழுமையும் நமது மாகாணத்துக்குள்ளேயே நியாய விலைக்கு விவசாயிகளுக்கு நேர் முகமாவது, லைசென்சு பெற்ற வியாபாரிகள் மூலமாவது, கூட்டுறவு சங்கங்கள் மூலமாவது விற்பனை செய்ய வேண்டும். அப்பிண்ணுக்கில் கொஞ்சமாவது இந்த மாகாணத்துக்கு வெளியே உள்ள இடங்களுக்கு ஏற்றுமதி செய்யலாகாது.

(3) மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதாவதொன்றை மீறினால் உரியவர்களுக்கு வழங்கியுள்ள லைசென்சுகள் காரணங்காட்டாமலும் முன்னறிக்கையின்றி ரத்து செய்யப்படும்.

(4) எக்காலத்திலாவது ஒரு டன் கடலை எண்ணெய் பிண்ணுக்கு ரூ. 200-க்கு மேற்பட்ட விலைக்கு விற்பதாகக் கண்டாலும், செக்குக்கு உரியவர்கள் அல்லது வியாபாரிகள் அபரிமித லாபம் பெற விரும்புவதாலும், இதர காரணங்களாலும் ஷெ பிண்ணுக்கு யாவர்க்கும் நியாய முறையில் விநியோகிக்கப்படுவது அல்லது விற்பனையாவது தடைப் படுவதானாலும், இப்போது பிறப்பித்துள்ள கட்டுப்பாடு நீக்கக் கட்டளை ரத்து செய்யப்பட்டு விடும்.

(5) ஆறுமாத காலத்துக்குப்பிறகு, இது சம்பந்தமான நிலைமையைக் குறித்து சர்க்கார் திரும்பவும் ஆலோசனை செய்வார்கள்.

எண்ணெய் செக்குக்கு உரியவர்களும் அது சம்பந்த பட்டோரும் இம்முழு கட்டுப்பாடு நீக்கத்தை வெற்றி பெறச் செய்வார்களென்று சர்க்கார் ஆவலுடன் நம்புகிறார்கள். *(சர்க்கார் அறிக்கை)*

மோட்டார் வண்டிகளின் நிறம்: 1940-ஆம் வருஷத்திய சென்னை மோட்டார் வண்டி ரூல்களில் புதிதாய் ரூல் 393D என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது தபால் தந்தி இலாகாவால் அல்லது அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவரால் தபால்களை கொண்டு போக உபயோகப்படும் மோட்டார் வண்டிகளுக்குப்பூசப்படும் அதே நிற வர்ணத்தை மற்ற பொது மோட்டார் சர்விஸ் வண்டிகளுக்குப் பூசக்கூடாது.

கடைசியில் வந்த அறிக்கைகள்

ஜவுளி - நூல்

ஜவுளி நூல் வியாபாரிகள் கண்ட்ரோல் சட்டம்-சில போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு புதிய அதிகாரம்.

போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்களும் அவர்களுக்கு மேல் அந்தஸ்துள்ள போலீஸ் அதிகாரிகளும் இச்சட்டங்களில் இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஜவுளி நூல் கடைகளில் சோதனை போடலாம், கணக்குகளைப் பார்க்கலாம், விசாரணை செய்யலாம். ஆனால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்கு கீழே இருப்பவர்கள் துணியையோ நூலையோ கைப்பற்ற அதிகாரமில்லை.

(29—3—1949 சர்க்கார் கெஜட்-பாகம் II பக்கம் 283)

ஜவுளி வியாபாரிகள் கட்டவேண்டிய டிபாசிட்: ஒருவரே மொத்தவியாபாரம் சில்லரை வியாபாரம் இரண்டுக்கும் லைசென்ஸ் பெற்றிருந்தால் ஜாஸ்தி கட்டவேண்டிய (மொத்த வியாபாரத்திற்கு கட்டவேண்டிய) டிபாசிட் மட்டில் கட்டினால் போதும். சட்டத்தை மீறியதற்காக டிபாசிட் தொகையை சர்க்கார் பறிமுதல் செய்ய நேரிட்டால் எந்த வியாபாரத்தின் விதிகள் மீறப்பட்டதோ அதற்கு ஏற்பட்ட டிபாசிட் தொகைதான் பறிமுதல் செய்யப்படும்.

(29—3—49 சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 37)

கலர்நூல் வியாபாரிகள் டிபாசிட் தொகை சில இடங்களில் குறைக்கப் பட்டிருக்கிறது: சென்னை, மதுரை, ராமனாதபுரம் இந்த ஊர்களில் ஒருவரே ஓரே இடத்திற்கு மொத்த வியாபாரத்திற்கும் சில்லரை வியாபாரத்திற்கும் கலர் நூல் விற்க லைசென்சு பெற்றிருந்தால் அவர் ரூ. 5000 மட்டில் தான் டிபாசிட் கட்டவேண்டும்.

(15—3—49 சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 30)

ஜவுளி உள்நாட்டு சுங்க வரி: மில் ஜவுளிகளின் மில் வாசல் விலையில் உள்நாட்டு சுங்க வரி சேரவில்லை யாகையால் இந்த வரி போடப்பட்டுள்ள ஜவுளிகள் எந்த நிலைமையில் இருந்தாலும் (அதாவது மில்லிலோ மொத்த வியாபாரத்திலோ, சில்லரை வியாபாரத்திலோ விற்கப்படும் ஒவ்வொரு நிலையிலும்) வசூலிக்கப்படும் என்று மாகாண ஜவுளி கமிஷனர் அறிக்கையிலிருந்து தெரிகிறது.

புதுச்சேரி மில்நூல் விலைநிர்ணயம்: இந்த நூல் சென்னை மாகாணத்தில் விற்க மில் வாசல் விலையுடன் மொத்த வியாபாரத்தில் $3\frac{1}{8}$ சதவிகிதமும் சில்லரை வியாபாரத்தில் $7\frac{3}{16}$ சத விகிதமும் தவிர வண்டிச்சத்தம் விற்பனை வரியும் சேர்த்துக் கொள்ளலாம். கோவாபரேடிவ் கடைகளுக்கு இதே விலைதான்.

(22.3-49 சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 257)

உணவுதானியம்

உணவு தானியங்களை ஏற்றிச் செல்லும் (மோட்டார், லாரி முதலிய) வண்டிகள்: இவைகளை ஓட்டுகிறவர்களும் கண்டக்டர் முதலியவர்களும் சட்டத்தில் அதிகாரம் பெற்ற அதிகாரிகள் சொல்படி வண்டிகளை நிறுத்தி அவர்கள் சோதனை செய்வதில் உதவவேண்டும். (இல்லாவிட்டால் அவர்கள் குற்றம் செய்பவராவர்.) இப்படி உணவு தானிய தீவிர கொள்முதல் உத்திரவில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(15-3-49 சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட். பக்கம் 31)

நெல் (முதலிய உணவுதானியங்களை) கொள்முதல் செய்ய லைசென்ஸ்கள் இனி தாராளமாய் கொடுக்கப்படும்: இப்பொழுது லைசென்சு பெற்றவர்கள் பலர் பணவசதியில்லாமல் கஷ்டப்படுவதை உத்தேசித்து அதிகப்படியான கொள்முதல் ஏஜண்டுகளை சர்க்கார் நியமிக்க தீர்மானித்திருக்கிறார்கள். மொத்த கொள்முதல் ஏஜண்டாகவோ, சில்லரை கொள்முதல் ஏஜண்டாகவோ நியமிக்கப்பட 30—4—1949-க்குள் ஜில்லா கலெக்டருக்கு மனுப்போடலாம். 1942-க்கு முன் உணவு தானிய வியாபாரம் செய்தவர்கள் மொத்த வியாபாரம் செய்யவும் சில்லரை வியாபாரம் செய்யவும் லைசென்சு பெற ஜில்லா வர்த்தக வரி அதிகாரியிடம் மனுப்போடலாம். ஆனால் இவர்கள் பதுக்கல் கள்ளமார்க்கெட் இவைகளில் சம்பந்தப்பட்டவராக இருக்கக்கூடாது.

உலையில்

(1) கள்ள மார்க்கெட் ஒழிப்பு மசோதா: சென்னை சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் மிக முக்கியமசோதா. இதில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது (1) கள்ள மார்க்கெட்டில் வியாபாரம்செய்பவர்என்றால் யார்? (2) அவருக்கு என்ன தண்டனை?

"கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்பவர்" என்றால் (1) நியாய விலைக்கு அதிகமாக கொடுத்து வியாபாரத்திற்காக அல்லது லாபத்தில் விற்க ஒரு பொருளை வாங்குபவர்; வியாபாரத்தில் நியாய விலைக்குமேல் விற்பவர். (2) வியாபாரத்தில் நியாயவிலைக்கு மேல் அதிக விலை கேட்பவர். (3) கையில் சரக்கை வைத்துக்கொண்டே நியாய விலைக்கு அதை விற்க மறுப்பவர். (4) வேறொரு சாமானையும் விலைக்கு வாங்கிக் கொண்டால்தான் ஒரு குறிப்பிட்டப் பொருளை விற்பேன் என்று நிபந்தனை செய்பவர். (5) வியாபாரத்திற்காகவோ லாப விற்பனைக்காகவோ ஒரு பொருளை அவ்வப்போது அமலிலிருக்கும் சட்டம், விதி, விளம்பரம் அல்லது உத்திரவிற்கு முரணாக வாங்குபவர் அல்லது விற்பவர்.

"நியாய விலை" என்றால் சர்க்காரின் சட்டம் மூலம் விளம்பரம் அல்லது உத்திரவின் படி நிர்ணயிக்கப்பட்ட (அல்லது உத்திரவின் படி நிர்ணயிக்கக்கூடிய) விலையைக் குறிக்கும்.

தண்டனை: கள்ளமார்க்கெட்டில் வியாபாரம் செய்வோருக்கு (1) 6 மாதத்திற்கு குறையாமல் 6 வருஷம் வரை சிறை தண்டனை (2) கள்ளமார்க்கெட் பேரத்திலுள்ள பொருளை அல்லது அந்தப் பொருளை கோர்ட் மூலம் விற்று கிடைக்கும் பணத்தை, அல்லது வியாபாரியிடம் கைவசமிருக்கும் அதே அளவு அதே பொருளையாவது அதன் மதிப்பையாவது சர்க்காருக்கு பறிமுதல் செய்யவேண்டும். (3) அபராதம். இந்த மூன்று தண்டனையும் சேர்ந்தாப்போல் கட்டாயமாக விதிக்கப்படவேண்டும். கேசை விசாரிக்கும் நீதிபதி 6 மாத சிறை வாசத்திற்கு குறைவான தண்டனை கொடுக்க உத்தேசித்தால் அதற்கு தனியாக தனது காரணங்களை தீர்ப்பில் சொல்ல வேண்டும்.

மீண்டும் குற்றம் செய்தால்: மேற்கண்ட தண்டனையுடன் 3 வருடத்திற்கு நன்னடத்தை ஜாமீன் கேட்கலாம்.

ஒருவர் மூன்று தடவை தண்டனைப்பட்டால்: சர்க்கார் அவரை (1) வியாபாரமே செய்யாமல் தடுக்கலாம். (2) ஊரைவிட்டு அகற்றலாம்.

உடந்தையாக இருப்பது: கள்ளமார்க்கெட் வியாபாரத்திற்கு உடந்தையாக இருப்பவருக்கும் அதே தண்டனைதான். ஆனால் வர்த்தகத்திக்காக அல்லாமல் சொந்த உபயோகத்திற்காக அதிக விலை கொடுத்து வாங்குபவர் கள்ள மார்க்கெட்காரருக்கு உடந்தையாக இருந்ததாக மதிக்கப்படமாட்டார்.

(2) ஹிந்து (லா) சட்ட தொகுப்பு மசோதா: இந்திய யூனியன் பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது சட்டமானால் ஹிந்துசட்டத்தில் பல அடிப்படையான மாறுதல்கள் ஏற்படுத்தும். அவை சுருக்கமாக (1) "அவிபக்த குடும்ப சொத்து" அல்லது பிரிக்கப்படாத ஐக்கிய குடும்ப சொத்து என்பது போய்விடும். (2) ஸ்திரீகளுக்குச் சொந்தமான எவ்வித சொத்தையும்அவள் இஷ்டப்படி எவ்வித பாரதீனமும்செய்யலாம். (3) ஒருஹிந்து இறந்து போனால் அவருடைய சொத்தில் அவருடைய மகனும் மகளும் சம வார்சுகளாகிறார்கள். சம பங்கு எடுத்துக் கொள்வார்சள். (4) ஹிந்து சமூகத்திற்குள் கலப்பு மணம் அங்கீகரிக்கப்படுகிறது. (5) ஒரு தாரம் உயிருடன் இருக்கும்போது வேறு தாரம் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது. (6) சில முக்கிய காரணங்கள் இருந்தால் கோர்ட் மூலம் விவாகத்தையே ரத்துசெய்துகொள்ளலாம். (7) இன்னும் சுவீகாரம், வார்சு கிரமம், கார்டியன் பாத்தியம் இவைகளில் முக்கிய மாறுதல்கள் ஏற்படும்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. R RAJAGOPALAN at No. 48 Kalyanaraman Street, Kumbakonam.

187684

"வக்கீல்" அடுத்த இதழ் முதல்

ஷாப் சட்டம், விற்பனைவரி சட்டம் இரண்டும் (கடைசியாய் வந்த ரூல்கள் உள்பட) தொடர்ச்சியாய் வரும். மற்றும் புதிய சட்டங்கள், கண்ட்ரோல் ஆர்டர்கள்—புதிய வரிகள் இன்னும் பல புது அம்சங்களுடன் வெளிவரும்.

"வக்கீல்" பத்திரிகை - விளம்பர விகிதம்.

(ஒரு முறை பிரசுரம் செய்ய)

பின் அட்டை முழுப்பக்கம் ஒரு கலர்	ரூ.	60	0	0
,, ,, இரண்டு கலர்		100	0	0
,, ,, மூன்று கலர்		120	0	0
அட்டை உள் முழுப்பக்கம்		50	0	0
,, ½ பக்கம்		25	0	0
உள்பக்கம் முழுவதும்		40	0	0
,, ½ பக்கம்		20	0	0

சோதரீ
ஸ்தீரீகளுக்கு ஓர் வரப்பிரஸாதம்
விபரங்களுக்கு
இந்தியன் ஹோமியோபதீ இன்ஸ்டிடியூட்
கும்பகோணம்